Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

9 AUG 1971

# ஈழநாடு

வார மலர்

மலர் 13 | ஆடி 23 | ஐ; ஆகிர் 16 | ஞாயிற்றுக்கிழமை | (8—8—71) | இதழ் 176






# தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்றையும் கற்க வேண்டும்

## உண்மையான ஐக்கியம் ஏற்பட தாவீது அடிகள் கூறும் யோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு "பருத்தித்துறை முதல் தெய்வேந்திர முனைவரை எல்லாமக்களும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் கற்க வேண்டும். படித்தவர்கள் மும்மொழியையும் கற்கலாம். மற்றவர்கள் கட்டாயம் தமிழ், சிங்களம் மொழிகள் கற்கவேண்டும். அப்பொழுதுதான் இந்த நாட்டில் உண்மையான ஐக்கியம் ஏற்படும்," யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்த தமிழ்மொழி ஆய்வரங்கில் 32 மொழிகளைக் கற்ற தாவீதடிகள் மேற்கண்டவாறு கூறினார்.

வண. பேராசிரியர் சே.ச. தனிநாயக அடிகளின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் எனாநிதி தாவீது அடிகள் மேலும் கூறியதாவது: 30 ஆண்டு இவ்விடத்தில் நடந்த கூட்டத்திற்கு ஞானப்பிரகாச அடிகள் தலைமைதாங்கினார். அதன் பின் நான் ஞானப்பிரகாச அடிகளை சந்தித்து "உங்களுக்கு ஆராய்ச்சி நடத்துவதற்குஎப்படி அறிவு வந்தது, என்று கேட்டேன். பல மொழிகளைக் கற்றதன் பயனாக இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டேன் என்றார். தமிழ்மொழியின் தொன்மை பற்றியும் சிறப்பும் பற்றியும் விளக்கிக்கூறினார் அதன் பின் நான் அவரின் வழியை பின்பற்ற முற்பட்டேன்

முன்னைய காலத்தில்நீண்ட சொற்கள்பாவிப்பில் இருந்து வந்தன மக்களின் சோம்பல் காரணமாக நீண்ட சொற்கள் குறுகின ராஜா என்பதை ராஜ என்றனர் இதேபோல் தாமிழர் என்பது தமிழர் ஆனது

சிங்களம் என்றால் என்ன? கன்னடம் தெலுங்கு மொழிகளுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையது சிங்களம் திராவிட மொழிகளின் தங்கைதான் சிங்களம் சிலர் சிங்களத்தை ஆரிய மொழியாக்கப் பார்க்கிறார்கள் சிங்கள மொழியில் எத்தனையோ தமிழ் சொற்கள் இருப்பதைக் காணலாம் தமிழ் சொற்கள்கூட சிங்களத்தில் காணப்படுகின்றன

ஓர் எழுத்தைச் சரியாக உச்சரிக்காவிட்டால், அந்த எழுத்து காலவெளியில் தானாகவே அழிந்துவிடும்

எழுவ என்ற மொழிதான் பாலியுடன் கலப்புற்று சிங்களமாக மாறியது. சிங்கபாகு, விஜயன் என்பதெல்லாம் கட்டுக் கதை; கற்பனை அப்படி ஒன்றும் நடக்கவில்லை. சிங்கள மொழியை ஆரிய மொழியாக்குவதற்கு இப்படிச் செய்தனர்.

கிறிஸ்துவிற்கு 800 ஆண்டுகளுக்கு முன்னர், ஆரியம் புகுந்து திராவிட மொழிகளுக்கு இடையூறுகளைச் செய்தது.

சிங்களத்தில் 'யாழுவ' என்றால் நண்பனைக் குறிக்கும் யாழ் என்றால் நண்பனும் தெருள் குறிலாக மாறிவிட்டது இப்படி பல சொற்களைச் சிங்களத்திலும் தமிழிலும் காணலாம்

கிறிஸ்துவிற்கு 500 வருடத்திற்கு முன்னர் இந்நாட்டில் ஒரே மொழி, ஒரே இனத்தவர் வாழ்ந்தனர். பின் தமிழ், ஆரிய சொற்களுடன் வந்ததுபோல், எளுவ பாலியுடன் கலந்து சிங்களமாகியது.

பிறமொழி படிக்க சிலர் பிறநாட்டிற்குச் செல்கின்றபோது தானாகவே வரும் சிங்களத்தை நாம் ஒதுக்கித் தள்ளலாமா? சிங்களம் படிப்பதில் என்ன தவறு? நான் 32 மொழிகள் படித்துவிட்டேன். இன்னும் பல மொழிகள் கற்கவேண்டும் என ஆசைப்படுகிறேன்

### நான்கு குழந்தைகளுடன் மாண்டாள் 'நல்லதங்காள்'

கோயம்புத்தூர், ஆக. 7

தான் பெற்ற குழந்தைகள் நான்கும் கதறித் அடிக்க, கிணற்றுள் தூக்கிப் போட்டுவிட்டு, தானும் அதே கிணற்றுக்குள்ளேயே விழுந்து அவர்களுடன் சேர்ந்து மாண்டாள் ஒரு தாய். இந்தத் துயர சம்பவம் இன்று கோயம்புத்தூரில் நடந்துள்ளது. இந்நிகழ்ச்சி நடக்கும்போது வழக்கொன்று சம்பந்தமாக கைதாகி காவலில் இருந்தார் அப்பெண்ணின் கணவர்

# சந்திரனில்காரோட்டிய வீரர்கள் திரும்பினார்கள்

## சேகரித்ததகவல்களை ஆராயபலவருடமாகும்

ஹூஸ்டன், ஆக. 8

சந்திரனில் காரோட்டி, அண்டவெளியில் அந்தரத்தில் நடந்து சாதனைக்கு மேல் சாதனை செய்த அமெரிக்காவின் "அப்பலோ-15' வெற்றித் திலகங்கள் இன்று அதிகாலை பசிபிக் சமுத்திரத்தில் வந்திறங்கும்போது, பத்திரமாக அவர்களை மீட்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருந்தன.

நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னதாக, இச்செய்தி அச்சுக்குப் போகும்போது, காற்று மண்டலப் பாதைக்குள் அப்பலோ-15 சந்திரக்கலம் வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

விண்வெளி வீரர்கள் டேவிட் ஸ்கொட், ஜேம்ஸ் இர்வின், அல்பிரட் வோர்டன் ஆகிய மூவரும் மிகவும் உற்சாகமாக இருந்தார்கள். அப்பலோ-15ன் வேகம் இருமடங்காக அதிகரித்துள்ளது.

பசிபிக்சமுத்திரத்தில் சந்திர வீரர்களை மீட்க கப்பல் தயார்நிலையில்நின்றுகொண்டிருக்கிறது.

சென்ற மாதம் 26-ம் திகதி புறப்பட்ட இந்தச் சந்திரக்கலம் 30-ம் திகதி சந்திரனில் இறங்கியது. சந்திரனில் காரோட்டிய முதல் சாதனையைச் செய்தவர்கள் என்ற பெருமையைத் தட்டிக்கொண்டார்கள் டேவிட் ஸ்கொட்டும், ஜேம்ஸ் இர்வினும் சந்திரத் தரையில் காரோட்டி அற்புதம் நிகழ்த்தினார்கள் அதே போன்று தாய்க்கலத்தில் வலம்வந்த வோர்டன் பூமியை நோக்கித் திரும்பும் போது அந்தரத்தில் நடந்தார் நீண்ட நேரம் நடந்த சாதனையை இவர் செய்தார்

சந்திரத் தரையில் சந்திர வீரர்கள் சேகரித்த புள்ளி தகவல்களைபற்றி முழுமையாக ஆராய்ந்து அறிய பல வருடங்களாகுமென்று ஹூஸ்டன் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

### 2-வது டெஸ்ட்

### இந்தியா: 5-153

லண்டன் (மான்செஸ்டர்) ஆக. 7

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையே மான்செஸ்டரில் நடக்கும் 2-வது கிரிக்கெட் டெஸ்ட் மூன்றாவது நாளான இன்று இந்தியா, இச்செய்தி அச்சுக்குப் போகும்போது 5 விக்கெட் நஷ்டத்துக்கு 153 ரன்கள் எடுத்துள்ளது. இந்திய கோஷ்டியைச் சேர்ந்த இளம் ஆட்டக்காரரான சுனில் கவாஸ்கர் முதலில் துருப்பெடுத்தாடி 57 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்டம் தொடர்ந்து நடக்கிறது முன்னதாக இங்கிலாந்து கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 386 ஓட்டங்களை எடுத்தது.

### சந்திப்பு

சென்னை, ஆக 7

இலங்கை ஜன தொ. காங்கிரஸ் தலைவரும், நியமன எம். பி. யுமான ஜனாப் ஏ. அஸீஸ் இன்று தமிழக முதல்வர் திரு மு கருணாநிதியை ஒருமணிநேரம் சந்தித்துப் பேசினார்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டாலர் அலுமினியம்

ONE-DOLLAR

# சபய நெறி காட்டும் விரதநெறிச் சார்ந்தோர் வாழும் மீசாலைக் கிராமம்

படைத்தல், காத்தல், அழித்தல் என இறைவனின் தொழில் மூன்றும், இந்த மூன்று என்ற இலக்கம் தமிழோடும் தமிழகத்தோடும் என்றும் நீக்கமற இணைந்து கொண்டிருக்கிறது.

இயலிசை நாடகம் என்ற மூன்றும் இணைந்தமையால் தமிழ் முத்தமிழாகிச் சிறப்புற்றது. தமிழகத்தை ஆட்சி செய்தவர் முடியுடை சேர, சோழ, பாண்டியரா கிய மூவர். இந்தவகையில் தமிழ்மக்கள் விரும்பிப் புசித்த கனிகள் மூன்று.

## எங்கள் கிராமம் - 16

மா, வாழை, பலா ஆகிய இந்த முக்கனிகளின் பெருமையை சங்க இலக்கியங்கள் தொடக்கம் இன்றைய தாலாட்டு நாட்டுப்பாடல்கள் கூட சுவைத்துப் பேசுகின்றது.

ஒரு தமிழ்த்தாய் தொட்டிலில் குழந்தையை இட்டுத் தூங்க வைப்பதற்கு,

முக்கனியே! சர்க்கரையே!

என்று தொடங்கும் தாலாட்டில் எமது நாவில் சுவையூறுகின்றதல்லவா!

இந்த முக்கனிகளுள் ஒன்றான மாங்கனியின் சுவையை நன்குணர்ந்தவர்கள், மாசாலை என்று பழம் பெருமையுடைய பெயர் மீசாலை என்ற திரிபுற்று தென்மராட்சியில் இலங்குகின்ற எங்கள் கிராமத்தவர்கள்.

### மீசாலை என்கின்ற மாசாலை

இலங்கையின் பிரதான வீதியான கண்டி - யாழ்ப்பாண வீதியில் - கண்டியிலிருந்து 185 மைல் தொடக்கம் 187 மைல்வரை உள்

சாவகச்சேரி என்கின்ற தென்மராட்சியின் முக்கிய ஊருக்குத் தெற்கே கச்சாய், அல்லாரை, கொடிகாமம், மந்துவில், வரம்பிராய் ஆகிய ஊர்களை எல்லையாகக் கொண்டிருக்கின்றது.

கல்வயல், சரசாலை, மட்டுவில் முதலியவூர்களுக்கும் இக்கிராமத்து உள்ளூர் ஆம் சித்தொடர்புள்ளது.

"இலகென்று அசைநீ இருப்பாரை காணின் நிலமென்னும் நல்லாள் நகும்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் நெறிவழிப் படர்ந்த காராளர் இனத்தையே நூற்றுக்கு எழுபத்தைந்து வீதத்துக்கு அடக்கியுள்ளது இந்தக்கிராமம் என்பதை ஆங்காங்கு பரந்து விரிந்து கிடக்கும் செழுமைசால் வயல்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. மல்லாளி இரணவடலிக்குளம், குளம், தாழையோடுதாழ்வுக் குளம், கடுடையார்தரவு, ஏட்டுக்குளம், ஈகலக்கேணி, வேலவக்கிக்குளம், பனையடிக்

ளடக்கியிருக்கும் இந்த மீசாலை என்கின்ற மாசாலையைக் கடந்தே யாழ்ப்பாணத்துக்கு வருதல் வேண்டும்.

ஏறத்தாழ ஆறுமைல் சுற்றளவு அமைந்த இந்தக் கிராமத்தை ஊடறுத்து பிரதான புகையிரத வீதியும், பகிரங்கவீதியும் சமாந்திரமாக அமைந்துள்ளன.

குழம், சின்னமண்டுவில், அண்ணமார் குளம், இன் வாரை, துண்டுக்குளம், நடுவில்தரவு, திலைக்குளம் ஆகிய குளங்கள் ஆகிய குளங்கள் இங்கு முன்னுளில் வெட்டுவிக்கப்பட்டுள்ளன. ஆயினும் இவற்றை நம்பி விவசாயம் செய்யப்படுவதில்லை. தோட்டங்களுக்கு இந்நீர் பயன்படுகிறது. ஆவணி மாதத்துக்குப் பின் வானத்திலே கார்கறுத்துப் பேரிடி மின்னலுடன் பொழியும் மழையை நம்பியே இங்கு விவசாயம் ஆரம்பிக்கப்படுகின்றது.

ஈலிங்கமுதலியார் என்ற காராளர் பல நண்பர்களுடனும் உறவினர்களுடனும் இந்தக்கிராமத்தில் ஏராளமான காலநடைச் செல்வங்களை வளர்த்தும் விவசாயத்தை மேற்கொண்டும் மிகவும் செல்வாக்குடன் விளங்கினர் என்பது கதை. கச்சாய், பூநகரிக் கடற்

கிராமத்தின் பழமையான பெருமைக்குரித்தாகியுள்ள ஆமீகப்பற்றும் சைவநெறியில் அசையாத நம்பிக்கையும்கொண்டு இன்றும் வாழுகின்ற இந்தக் கிராமத்து மக்களின் சமய வாழ்க்கையைக் காட்டுஞ் சின்னங்களாக ஏராளமான கோவில்கள் உள்ளன. கிராமத்தின் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய எல்லைகள்தோறும் பிள்ளையார் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சொந்தக் கிராமத்தில் மட்டுமல்ல வசதி குறைந்த காலத்தில் கடல் மார்க்கமாகச் சென்று கரைச்சி, பரந்தன், தட்டுவன்கொட்டி, கண்டாவளை ஆகிய இடங்களில் விவசாயப்புலங்களை நிறுவி விவசாயத்தின் மூலம் வருவாயைப் பெருக்கி வந்திருப்பவர்கள் இந்தக் கிராமத்துமக்கள்.

விரலாக முகாமையாளர் உதவியாளர்களுடன் அவ்விடத்துக்கு வந்தபோது திருடிய பொருட்கள் மரத்தின் மேலும் திருடன் மரத்தின் மேலும் காணப்பட்டான்.

இக்கோவிலுக்கு திருநீலகண்டம் என்றவுடைமொழி ஏற்படுவதற்கு காரணமாயுள்ள கதை மற்றொன்றாகும்.

முற்குறிப்பிட்டகதை நடந்த வெகுகாலத்துக்குப் பின்னர் கோவில் முகாமையாளர் மரங்கள் சிலவற்றைத் தறித்துவந்தனர்.

அக்கடற்கரைப் பிராந்தியத்தைநாடி அக்காலம் வருகைதந்தவர்கள் சங்கு குளிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்தனர். கடலில் குளிக்கும் சங்குகள் கடற்றுறையிலிருந்தே பிறஇடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

இந்தக் கிராமத்தின் மத்தியிலே உண்மையைப்போல் ஒளிகிர சிறப்புடன் விளங்குவது திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில். கந்தபுராணபடனமோ, அறுபத்துமூவர்சரித்

# வளமார் குளமும் வயலும் மண்டிய ஊர்

றுறையால் செல்லுகின்ற வசதியிருந்தமையால் இவர் பூநகரிப் பகுதியிலும் ஏராளமான கமபுலங்களை வாங்கி அங்கும் விவசாயத்தை மேற்கொண்டிருந்தாராம்.

### அல்லி அரசாணியின் கோட்டையும் கிணறும்

இங்கு அமைந்துள்ள அல்லி அரசாணியின் கோட்டை' அரசாணி நீராடும் கிணறு' குளங்கள் என்பன இந்தக்

கச்சாய்க்கடலின் கரையிலுள்ள கடற்றுறையே முக்கியதுறையாக அமைந்திருந்தது. அக்காலத்தில் பாய்த்தோணிமூலம் கடற்பிரயாணம் நடைபெற்று வந்தது. கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரேயே இந்தக்கடற்பிரயாண வசதியற்றுப்போனது. தற்காலத்து வாகனங்கள் அந்த இடத்தை நிறைவுசெய்துள்ளன.

இத்துறைமுகத்துக்குப் போகும்வழியில் கடற்றுறையிலிருந்து சுமார் கால்மைல் தொலைவில் அமைந்துள்ளது பிள்ளையார் கோவில். இப்பகுதியில்பண்டைக்காலத்தில் புங்கமரங்கள் ஏதேச்சையாக வளர்ந்துள்ள காரணத்தால் இச்சூழலில் அமைந்துள்ள பிள்ளையாரை புங்கடிப்பிள்ளையார் என்றாரணப் பெயரிட்டு அழைத்தனர். புங்கடிப்பிள்ளையார் மிக்க அற்புதமானவர். புங்கமரத்தடியிலும் சாலிங்கமுதலியாரின் வழிடிப்பசுப்பாலை விரும்பி வற்றுவித்தவர்.

திரமோ, தேவார பண்ணிசையையோ விடாது ஒலித்துக்கொண்டிருக்கும் இந்தக் கோவில் ஊர்மக்களின் அசையாத பக்திக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

சைவசமய நூல்கள் காட்டும் விரதநெறியில் படர்பவர்கள் இந்தஊர் மக்கள் இம்மரங்கள் உத்தரவின்றி தறிக்கப்பட்டதாக அவர்மீது குற்றஞ்சாட்டிக் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வழக்கை விசாரணை செய்வதற்கு முதல்நாள்குறிப்பிட்ட விசாரணையாளரின் மனைவிக்கு கண்டத்தில் நோ காணப்பட்டது. திடீரென இவ்வியாதி ஏற்பட்டதை விசாரித்தபோது ஒருவர் பிள்ளையார் கோவில் முகாமையாளர் கைதுசெய்யப்பட்ட கதையைக் கூறினார். மேலும் அக்கோவிலின் அற்புதத்தை கூறி கோவிலுக்கு நேர்த்திவைத்தால் கண்டநோ மாறும் என்றும் தெரிவித்தார்.

விசாரணையாளர் நேர்த்தி வைத்து முகாமையாளரை

கு. வி. மகாலிங்கம்

கடற்கரையில் மாடுமேய்த்த பிள்ளைகளுடன் குட்டி வெள்ளையானையாக விளையாடிப்புங்கஞ்சோலையில்மறைந்தவர். மறைந்த இடத்தில் அடையாளமாகப் பிள்ளைகள் நட்ட கற்கிழுவைமரம் இன்றும் அற்புதமாக ஆலயத்தில் இருக்கின்றது. அறுகம்புலத்திலும் தலம் உள்ளது. இக்கோவிலின் புதுமைகள்பற்றிப் பல கதைகளுள.

ஒருசமயம் இப்பிள்ளையார் கோவிலில் ஒரு திருடன் உள்ளே நுழைந்து சில கோவிற்பொருட்களைத் திருடிக்கொண்டு வெளியேறிவிட்டான். அப்பனின்புதுமை இங்கேதான் ஆரம்பமானது. திருடன் குருடனானான். அவன் தடவித்தடவி வெளியேறிதலவிருட்சத்தில் ஏறிக்கொண்டான்.

பிள்ளையார் கோவில்முகாமையாளரின் கனவிற் றொன்றி கோவிலில் திருட்டு நடந்ததையும் திருடன் தலவிருட்சத்திலிருப்பதையும் தெரிவித்துவிட்டார். இர

விடுதலைசெய்ய உண்மையிலே அந்நோய் மாறியது. இப்பெரியார் கோவிலுக்கு சில பொருட்களை உபயஞ் செய்தார். அவர் உபயஞ் செய்த பட்டுக்குடை ஆலவட்டம் என்பன இன்னும் கோவிலிலுள்ளன.

500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கந்தபுராணப்' படனம் ஒலையேட்டும் பிரதிகளும் இக்கோயிலில் அவற்றுடன் பேணப்பட்டுவருகின்றன.

வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலுக்கு தெற்கே கால்மைல் தொலைவிலுள்ளது பாலடிப்பிள்ளையார்.

நெய்தல்நிலத்தில் வாழும் பெருமக்களுடைய நிர்வாகத்தில இயங்குவது இக்கோவில். இக்கோவிலின் மூர்த்தியின் கீர்த்தி பெரிதாகும். மேலும் இக்கிராமத்தின் மிகமுக்கிய கோவில்களாக சித்திரவேலாயுதர் கோவில், நெல்லியடிக் கந்தசுவாமி கோவில், பன்றிக்கேணி கந்தசுவாமி கோவில்,

(12-ம் பக்கம் பார்க்க)



சிறுகதை

# கடவுள் ஏன் கல்லானர்?

க. பேரின்பநாயகம்

நகரத்தின் ஒதுக்குப்புறமான இடம்தான் எருக்கலைக் காடு. எருக்கிலையால் நிரப்பப்பட்டு காடாகிக்கிடந்த இடம் அது. இன்று எருக்கலை நின்ற இடமெல்லாம் அழகான வீடுகளும், ஆங்காங்கே நெடிய பரந்த நிழல்மரங்களும், கவினுறு பூமரங்களும் நிறைந்து காட்சியளிக்கிறது. குறுக்கே விரிந்து நீண்டதார்ரோட்டு, அந்த எருக்கலங்காட்டை இரண்டாகப் பிரிக்கிறது. ஜனப்புழக்கமும் அதிகரித்து போக்குவரவும் பெருகிவிட்டது. வருமானமும் வளர்ந்துவிட்டது. காடாகக் கிடந்த அந்த இடம், இப்போது காட்டின் களையே அழிக்கப்பட்டு, நகராக மிளிர்கிறது

இந்த ஜனநெருக்கடி மிக்க சூழலிலே, தனிப்பட்ட ஒருவரின் வளவினுள்ளே, கோபுரமுமின்றி முறையான சுவர்களுமின்றி, இருக்கிறது ஒரு வைரவர்கோவில். அந்தக்கோவில்-அந்த வைரவர்-அந்த வளவுகாரரின் கண்ணியம், நேர்மை, தர்மசிந்தை, உண்மை, உயர்ந்தவாழ்வால் அந்த வளவுக்குள் எழுந்துவிடவில்லை. காலம்காலமாக கருணையுள்ளத்தோடு- வரைமுறையின்றி அவ்வூர்வாசிகளுக்கு அருள் வழங்கிவந்த தெய்வம்- அந்த தெய்வம் குடிகொண்டிருக்கும் இடம் காசால் வாங்கப்பட்டுவிட்டது. அதற்காக அந்த தெய்வம் ஆரவாரிக்கவில்லை. அந்த தெய்வம் அப்போதும் மௌனமாக இருந்து, எப்போதும் செய்யும் எளிய கடமையைத்தான், கருணை மழையைத்தான் பொழிந்துகொண்டிருக்கிறது. நம்பின நல்லவர்க்கு நல்லபடி நடந்துகொண்டும்தான் இருக்கிறது.

அந்த தெய்வத்திற்கு இன்று கோலாகலமான திருவிழா. உடைந்து தூளாகத் தார்ந்துபோனபோது ஒளிவிளக்கின்றி, ஓலைக்கூரைகூட இன்றி வெறிச்சோடி வெய்யிலில் நின்ற அந்தச்சிலைக்கு இன்று பெருவிழா. குப்பை கூளங்களாலும், குழந்தைகளின் கழிவுநீராலும் குறைவின்றி விளங்கிய அந்தக் கோவில் இருக்கும் சுற்றுவட்டம் புனிதமாக்கப்பட்டு புதுநீர் தெளிக்கப்பட்டு, புத்தெழில் பூக்கிறது. வெய்யிலென்றும் மழையென்றும் பாராது. காக்கையென்றும் குருவியென்றும் பாராது கவனிப்பாரற்று சகிப்புத்தன்மையோடிருந்த வைரவர் சிலைக்கு, புதிய சுவர்கள் எழுப்பப்பட்டு, புதியகூரை வேடப்பட்டு, எழிலுடன் துலங்குகிறது. அந்த நாளில் அந்த தெய்வத்தை மதித்தவர்களால் காலத்துக்கேற்றபடி அழகோடும் பொலிவோடும் வைக்கப்படவில்லை. இயற்கையின் நீண்டகால கோரமான தாக்குதலினால் மங்கி மழுங்கிப்போன நேற்றையசிலை, இன்று நிறம் பூசப்பட்டுமினுங்குகின்றது. கண்ணைக்கவரும் எழிலுடன் துலங்குகிறது. ஆனால் அந்த சிலையின் தெய்வீகக்களையோ எப்போதும் போல் அப்படியேதான் இருக்கிறது. அந்த கண்வழங்கும் அருட்பார்வை அப்படியேதான் இருக்கிறது. யார் கவனிப்பும் இன்றி இருந்த காலமும் இயற்கைக் காரணிகளின் தாக்குதலுக்கு சகிப்புத்தன்மையோடிருந்த அந்தசிலை; இன்றும்இவர்கள் செய்யும் இயற்கையைவிட கொடுமையான தாக்குதலை போலிபூசை ஆராதனைகளை மனித மனத்தில் உதித்த சம்பிரதாயங்களின் முழுவிளைவை மிகமிக பொறுமையாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு அமர்க்களத்துக்கும், கொண்டாட்டத்திற்கும் காரணமாக விசுவாசம் தான் செய்த தீவினைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமாக இந்த திருவிழாவைச் செய்கிறாரோ என்றதொன்றைத்தவிர வேறொன்றையும் எண்ணத்தோன்றவில்லை. விசுவாசம் உயிர்களால் விசுவசிப்பதால் ஏற்பட்ட பெயரென்று கூறிடமுடியாது. கடன்பிணியாலும், கஷ்டத்தாலும் துன்பத்தாலும் அவ்வூர் மக்களை விசும்ப வைத்ததால் ஏற்பட்டிருக்க வேண்டும். கொலைத்தொழிலைத்தவிர கொள்ளையிலும் கொடூரமான கொள்ளி வைப்புகளை, ஊரிலே நடத்துபவர். மற்றவன் நன்றாக வரக்கூடாது என்பதற்காக, எதையும் துணிந்து செய்யக்கூடியவர். இன்னொருவன் கெடுவதற்காக அடுத்தவனுக்கு உதவியென்ற ரீதியில் ஊதாரி வேலைகைகொடுப்பதில் சளைக்காதவர்.

'வப்புச் சொத்து விசுவாசம்' என்றால் எருக்கலங்காட்டுப் பகுதியில்தெரியாதவர்களில்லை. அந்த அளவுக்கு 'கௌரவமான' பெயர் பெற்றதற்கு அவரிடம் நேர்மையாக, நீதியாக சேர்க்கப்பட்ட பணம் இல்லை. சமுதாயத்தின் நலிவுகளுக்கிடையே அநியாயமான முறையில் சுருட்டப்படும் பணம்தான் அவரிடம் இன்று அபரிமிதமாக விளையாடுகிறது. உலகத்தில் எவன் எந்த துரோகத்தைச் செய்தாலும், அவனிடம் பணமிருந்தால் அந்தப்பணம் அவனுடைய குற்றங்களை எல்லாம் மறைக்கும் ஒரு கருவியாகிவிடுகிறது. அநியாயமாக சுருட்டப்படும்பணம் ஆரம்பத்தில் எதிர்ப்பையும், கசப்பையும் ஏற்படுத்தினாலும், நாளடைவில் அதே பணம் அதே வகையில் பெருகத்தொடங்க- எதிர்ப்பவர்களும் எதிர்ப்பைத்தூண்டுபவர்களும் அடங்கியொடுங்கி அடிபணியத் தொடங்கிவிடுவார்கள். அந்த வகையில் விசுவாசம் போற்றப்படுபவர்தான். இன்று அவரை எதிர்ப்பவர்கள், ஏளனம் செய்பவர்கள் எவரும் இல்லை. அவர் படித்தது இல்லையாயினும் பணம்பெறும் கலை- அதிலும் கீழ்த்தரமான வழியை கரைத்துக்குடித்தவர். இன்று அவர் போற்றப்படுவதும் மதிக்கப்படுவதும் எதற்கு என்பது உலகத்தின் கண்களுக்கு நன்றாகத் தெரியும். இத்தனைக்கும் அவர்செய்த அநியாயங்கள், கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல.

(2)

பிள்ளைப்பாக்கியமே இல்லாத பொன்னம்பலம், மனைவியைஇழந்தவர். அதுகாலம் தொட்டு, ஏதோ கிடைத்ததை உண்ணும், அன்றாடம் காய்ச்சியான, அவரது அண்ணன் சிவசம்புவீட்டில் சாப்பிட்டுவந்தார். இவருக்கு பிள்ளையென்று உறவுசொல, உரிமை பாராட்ட அண்ணன் சிவசம்புவின் மகன்தான் இளையவாரிசு. பிற்கால சந்ததி. மனைவி இறந்த காலம் தொட்டு, தான் தனியாகச் சேர்த்துவைத்த திரண்ட சொத்துக்களெல்லாம் அண்ணனின் மகனுக்கே உரித்தாகவேண்டும், நல்லொருவரன் பார்த்து திருமணம் செய்து மகிழவேண்டும் என்று அன்பு மகனின் எதிர்காலம்பற்றி, இனிய கனவுகண்டுவந்ததோடு, அவ்வப்போது மகனின் படிப்புச் செலவுக்கு உதவியும்செய்து வந்தார் பொன்னம்பலம்.

இத்தனைக்கும் சிவசம்புவின் குடும்பம், வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்புமுனைகள் பலவற்றைச் சந்தித்த வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கி வாழ்கின்ற குடும்பம். அன்றாடம் உணவுக்கே கஷ்டமுறும் குடும்பம். உழைத்து உழைத்து ஓடாக என்பதுவரையையும் தாண்டிவிட்ட சிவசம்பு இருக்க இயற்கையின் உரித்தென்று சொல்ல ஒரு துண்டுக்காணியைத்தவிர, வேறு நகையோ நட்டோ, சொத்தோ சுகமோ இல்லாதவர். மேலும் மனைவிக்கு வயிற்றில் ஏற்பட்ட கொடிய நோயின் காரணமாக கொஞ்சக் கடனையும் ஊரில் சேர்த்துவைத்திருக்கிறார். தன் தம்பி பொன்னம்பலம் தனது குடும்பத்தை வளம் பெறச்செய்வான். வாழ்வு தருவான் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டிருந்தார் சிவசம்பு. அந்த நம்பிக்கையை சிதறடிக்க - குழிதோண்டிப்புதைக்க - அன்பைக்கெடுக்க - பொன்னம்பலத்திடம் பெருகும் பணத்தைப் பறிக்க ஒரு மனித மிருகம் காலம் வரும்வரை எதிர்பார்த்திருந்தது யாருக்குத் தெரியும்.

(3)

மனிதனுகப் பிறந்தவனும் பிரச்னைகளுக்கிடையே தான் வாழ்ந்துகொண்டிருக்கிறன். பிரச்னையும், பிணக்கும் அவன் வாழ்க்கையோடு ஒன்றிவிட்டவை. இந்தப் பிரச்னைகளும் பிணக்குகளும் விஸ்வரூபமெடுப்பது, இன்னொருவனால் தூண்டப்படுவதினால்தான். அண்ணன் தம்பிகளுக்கிடையே ஏற்பட்ட சிறு பிணக்கை நல்லமுறையில் பயன்படுத்தினார் விசுவாசம். சிவசம்புவையும் பொன்னம்பலத்தையும் பிரிக்க, அவர்களது இரத்த உறவை அறுக்க காலம் காலமாக வளர்ந்துவந்த அண்ணன் மகன் என் மகன் என்ற ஒருமைப்பாட்டைச் சிதைக்க எவ்வளவு முயற்சிகள் செய்யவேண்டுமோ யார் யாரால் செய்யப்படவேண்டுமோ அவ்வளவையும் அவரவர்களால் செய்துமுடித்தார் விசுவாசம். இவ்வளவும் செய்த விசுவாசம் பொன்னம்பலத்திற்கு தூரத்து உறவு. உயிர்த்துடிப்பான உறவுகள் பலவகையில் ஏற்படுகின்றன. பணமும் கூட ஒரு மனிதனுக்கு உண்மையான, வலிமையான உறவையும் தேடியும் தந்திருக்கின்றது. உறவுகளின் தன்மைகள், வலிவு நெருக்கம் என்பன உறவு எந்த அடிப்படையில், எவ்வகையான மனநிலையுடையவர்களிடையே ஏற்பட்டதென்பதைப் பொறுத்தது. விசுவாசத்தின் மனநிலையைப் பொறுத்தவரை, விசுவாசத்திற்கும் பொன்னம்பலத்திற்கும் ஏற்பட்ட உறவு பணம் காரணமாக எழுந்த போலி உறவு. ஆகவே இது காலத்தின் தேவையைப் பொறுத்து. விசுவாசத்தால் மிக மிக கெதியாக வலிமாக்கப்பட்டது. நெருக்கமடைந்தது.

இதன்விளைவு தன் சொந்தக்களாகவே இதுவரை காலமும் அன்புபாராட்டி உரிமை பாராட்டி, உறவுபேசி உதவி செய்த மகனிடம் தான்வாங்கிக்கொடுத்த கல்விக்கான உபகரணங்களைப் பறித்தார் பொன்னம்பலம். மகனுடன் கதைப்பதைத் தவிர்த்தார். அண்ணன் வீடு செல்வதை வெறுத்தார். ஒரு சில உறவினர்களிடமிருந்து தருமதியான பணத்தை விசுவாசத்தின் ஆலோசனையின் பேரில் கடிதமூலம் அறவிட்டார். மற்றும் எங்கெல்லாம் தன் பணம் முடங்கிக்கிடக்கிறதோ அங்கெல்லாம்-கடிதங்கள் எழுதி பணத்தை அறவிட்டார். படிப்பறிவில்லாத பொன்னம்பலத்திற்கு இதற்கெல்லாம் ஆலோசனை கூறி, கடிதமெழுதி உதவிசெய்ய தன் மகனை மூலம் உதவினார் விசுவாசம். சிதறிக் கிடந்த பணம் தொகையாக வந்துசேர விசுவாசம் முறையாக வாங்கி முடக்கிக்கொண்டார். இத்தனைக்கும் அபரிமிதமாக 'காலத்திற்கேற்ற' அன்பு பாராட்டும் விசுவாசம் குடும்பத்தை பொன்னம்பலம் முற்றுமுழுதாக நம்பினார்.

எந்த வகையில் அண்ணன் குடும்பத்திலுள்ள பற்று- பாசம் அறுக்கப்படவேண்டுமோ அந்தந்தவகையில் கொடுமையான கதைகள் கூறி சிறு பிணக்குகளைப் பெரிதுபடுத்தி பாசத்தைப் பறக்கடித்தார் விசுவாசம். அண்ணனையோ, அன்பு மகனையோ பொன்னம்பலம் எண்ணிடும்போது அவர்களை ஏளனம் செய்து எதிர்ப்பை மூட்டி, அன்பைக் கெடுக்க முடிந்தவரை பாடுபட்டு வெற்றியும்பெற்றார் விசுவாசம். காலமோ வேகத்தில் கரைந்தது. பொன்னம்பலம் நோயின்பிடியில் வீழ்ந்தார்.

(அடுத்த இதழில் முடியும்)

## நீங்களே எடுத்துச் செல்லலாம்

அமெரிக்கவிமான இறங்குதுறையில் இறங்கும் வெளிநாடுகளிலிருந்து செல்லும் உல்லாசப் பிரயாணிகள் தங்களிடம் 'இன்ரர் நஷனல் ட்ரைவிங் லைசென்ஸ்' இருந்தால் பெரியதொரு அழகான காரை நாளொன்றுக்கு 5 டாலர் வாடகையில் எடுத்துச்சென்று பார்க்கவேண்டிய இடத்தையெல்லாம் பார்த்துவிட்டுத் திரும்பும்போது இறங்குதுறையில் கொடுத்துவிட்டு வரலாம்.

லொஸ்ஏஞ்செல்ஸ், சான் பிரான்சிஸ்கோ நகரங்களில் பல கம்பனிகள் நாளொன்றுக்கு ஒரு டாலர் வாடகையில் உல்லாசப் பிரயாணிகளுக்கு கார்களை வழங்குகின்றன. அந்தந்த மாகாணத்துக்குள் மாத்திரம் சுற்றிப்பார்த்துவிட்டு காரை பெட்ரோல் நிரப்பும் நிலையத்தில் கொடுத்துவிட்டு உல்லாசப் பிரயாணிகள் திரும்ப முடியும்.

நிரந்தர சேமிப்புக்கு கீழ்
குறித்தபடி வட்டி கொடுக்கப்படும்

ரூபா 1000/- க்கு மேல் வருடம் 8 சத வீதம்
ரூபா 10000/-க்கு மேல் வருடம் 9 சதவீதம்

ரூபா 3000/- வரை சேமிப்பை 15 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்
ரூபா 5000/- வரை சேமிப்பை 30 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்
ரூபா 10000/- வரை சேமிப்பை 60 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்
ரூபா 10000/ க்கு மேற்பட்ட சேமிப்பை 90 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.

குறிப்பு:-
அறிவித்த நாள் தொடக்கம் வட்டி கொடுக்கப்பட மாட்டாது.

மறு விபரங்கட்கு:-

தம்பி அன் கோ.,

திருநெல்வேலி — வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

|சிறு காவியம்|

# அருணோதயம்

—பொ. கணபதிப்பிள்ளை—

அன்றொரு காலம் தன்னில்
அசுவமா வற்ற அந்த
நின்றிடு கோபு ரங்கள்
நிலவிடு மப்பு ரத்தில்
நன்றகள் திருந்த வல்லோர்
தனினமே கொண்டு நின்றே
தொன்றுறு வினைகள் போக்கத்
துணிவுடன் இருந்த காலை

## மறங்காக்கும் வீரர்

அறநெறிய தனைக் காட்டும்
அந்தணர் தமக்கு மேலாம்
மறநெறி காட்டி வைத்து
மாநிலம் பேணிக் காக்கும்
அறனிவன் அன்றோ வென்றே
அவனியோர் போற்ற வேண்டி
அறிவுறு குணத்தான் ஆங்கே
ஆர்ப்பரித் தெழுந்தான் அன்றே.

சுந்தரஞ் சேர்விங் கமுடன்
சொல்வதும் கல்நெஞ் சுடையான்
வஞ்சுறு பல்சாத் திரங்கள்
வித்தையு றக்கற் றுணர்ந்தோன்
மிஞ்சுபு கழ்பெற் றிருக்க
விரும்பிமி குதிரங் கொண்டே
நஞ்சமி குதொண்டர் குழாம்
நாயக மாய்நின் றுயர்ந்தான்

நஞ்சுமிழ் பொல்லா வந்த
நாவெனும் அரக்கன் தன்னை
நெஞ்சினில் வைத்தே நின்று
நேசிலா நெஞ்சர் தம்மை
மிஞ்சியே எழுந்து நின்று
விளைசத்தியாக் கிரகம் சாட
அஞ்சிடா வழியன் மெத்த
அறைந்துமே ஆட்டி நின்றான்

நின்றிடு தொண்டர் ஆங்கு
நெஞ்சினில் திடவார்த்து
கன்றிடு மனத்த ராகிக்
கனன்றுமே சுழன்று நின்றே
நன்றிவர் தம்மை நாமும்
நைதிடப் புடைப்போ மென்றே
நின்றுறு மருங்கொண் டார்போல்
நிலைபெறு தலைந்து வந்தார்.

சத்தியாக் கிரகம் என்னும்
சால்புறு போர்வை போர்த்தும்
அத்தனை நெஞ்சில் வையா
தரசினைக் காவல் வைத்தும்
வித்தைகள் காட்டி நிற்கும்
கட்சிகள் கனல் கொண்டும்
பித்தினைச் சிரசில் ஏற்றிப்
பிதற்றிடும் நிலையில் நின்றார்.

நின்றவர் தம்மைப் பேண
நிலத்தினில் எவரும் இல்லை
நன்றிலர். இவரைப் பேண
நாதனும் நலிவு கண்டான்
நின்றவர் கோட்டம் கொள்ள
நினைத்தொண்டார் துணிவு கண்டே
நன்றிது தருணம் என்றே
நலிவுற வைத்தார் அந்தோ.

தொண்டரின் கைகள் யாவும்
துரிதமாய் இருந்த தாலே
தொண்டிகள் ஆனார் சிந்தை
நோயுறக் கண்டார் அந்தத்
திண்டிறல் இழந்தார் நெஞ்சின்
திண்மையும் அற்று ஈகி
மண்டியிட் டிருந்து மெல்ல
மன்றமும் கண்டு நின்றார்.

மன்றமும் சுந்த ரற்கு
மருந்திடத் தெண்ட மாகப்
பன்னிய ஐந்து பத்துப்
பணந்தர வைத்த தாலே
சென்னியில் நோவு கண்டார்
திகைப்பினுக் காளு மானார்
மன்னிய மாமன் றத்தின்
மதிக்கொரு மனுவுஞ் செய்தார்.

சட்டமே போதும் என்றோர்
சலிப்புடன் இருந்தார் யாவும்
இட்டமாய் எதையும் செய்வோம்
என்றவர் இருந்து விட்டார்
தட்டமே யன்றி வேறு
நயமது எதுவும் காணக்
கட்டினர் கலக்க முற்றார்
கதியிழந் தயரும் உற்றார்.

[தொடரும்]

இலக்கிய இளைஞர் — 3

# வளவன் அறிவு

நுணாவிலூர்க் கவிஞர்

**வி. கந்தவனம்**

வழக்கு ஒன்று வந்துவிட்டது. தீர்வுகாண முடியாத வழக்கு. மன்னனிடம் சென்று முறையிட்டுத்தான் நீதிகேட்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. 'சரி. அவ்விதமே செய்வோம்' என்று முடிவு செய்தனர் வழக்காளிகள்.

வழக்காளிகள் சாதாரணமானவர்களல்லர். அவர்கள் கற்றறிந்த இருமுதியவர்கள். தெளிவாகஎதையும் ஆராயக்கூடிய திறமைபெற்றவர்கள். ஆனாலும் இவ்விருவரும் ஏதோ ஒரு விடயமாகத் தமக்குள் முரண்பட்டுக் கொண்டனர். அந்த முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்ளத் தமக்குள் பல நாட்களாக விவாதித்தனர். எனினும் ஒரு முடிவுக்கு வந்தாரில்லை. அவர்கள் நல்லவர்களாதலால் தமக்குள் பகைமை வளரக்கூடாது என்றுநினைத்தனர். எவ்விதத்திலேனும் இவ்வழக்குக்கு ஒரு முடிவுகண்டுதாம்முன்பு போல் நண்பர்களாக விரும்பினர். ஆதலால் நாட்டு மன்னனிடம் தம் வழக்கைக் கொண்டுசெல்ல உடன்பட்டனர்.

நாட்டு மன்னன் ஆண்டிலே மிகவும் இளையவன். கரிகாலன் என்பது அவன் பெயர். கரிகாலன்சிறுபிள்ளையாக இருக்கும் பொழுதே அவனது தந்தை இளஞ்சேட்சென்னி இறந்துபோயினன். ஆதலால் இளவயதிலேயே கரிகாலன் நாட்டை ஆளும் உரிமையைப்பெற்றான். இளமன்னன் கரிகாலனுக்கு அவனது மாமன் இரும்பிடர்த்தலையார் ஏற்ற துணையாக இருந்து வந்தார். இரும்பிடர்த்தலையார் ஓர் அரும்புலவர். அவரது அறிவுரைகளைப் பணிவோடு கேட்டு அவற்றுக்கு ஏற்ப ஆட்சி புரிந்துவந்தான் கரிகாலன்.

கரிகாலன் முன்னிலைக்கு முதியவர் இருவரும் தமது வழக்கோடு வந்தனர். அரியணை மீது அமர்ந்திருந்த அரசனை அவர்கள் நோக்கினர். அப்பொழுது ஓர் ஐயம் அவர்கள் உள்ளத்தில் எழுந்தது. "அரசனோ மிகவும் இளையவன். இவனுக்குஎமது வழக்கைவிசாரிக்கும்ஆற்றல் இருக்காது; அறிவும் இருக்காது; எல்லாவற்றுக்கும் மேலாகபழுத்த அனுபவம் அவனிடத்தில் இல்லையே. இவன் எமது வழக்கைவிசாரித்து நியாயமான தீர்ப்பை வழங்குவான் என்ற ஐயத்துடன் ஒருவரையொருவர் பார்த்தனர். 'மன்னன் வயதிலே இளையவன்; நீதி நூல்களை இந்தச் சிறிய வயதில் இவன் கற்றுத்தெரிந்திருக்க முடியாது. நுண்ணிய கருத்துக்களை ஆராயக்கூடிய திண்ணிய அறிவையும் இவன் பெற்றிருக்கமுடியாது. ஆதலால் எமது வழக்கை முறைப்படி கேட்டு இவன் நீதி வழங்கமாட்டான்; என்று எண்ணி வருந்தினர்.

கரிகாலன் அவர்கள் கருத்தைக் குறிப்பால் அறிந்து கொண்டான். அரியணையை விட்டிறங்கி அரண்மனைக்குச் சென்றுவிட்டான். சிறிது நேரத்தின் பின்னர் அங்கே ஒரு முதியவர் தோன்றி அரியணை மீது அமர்ந்தார். அவருடைய நரைத்த முடி, வெண்மையான தாடி, ஊன்றுகோல் முதலியவற்றைக்கண்ட வழக்காளிகள் இருவரும் அவர் ஒரு கற்றறிந்த ஞானி என்று கருதினர். அவரே தமது வழக்கைக் கேட்கும் தகுதியுடையவர் என்று மகிழ்ந்தனர். தகுதியுடைய ஒருவரை அனுப்பிவைத்த மன்னனை வாழ்த்தினர்.

அரியணையில் வந்தமர்ந்திருக்கும் பெரியாருக்கு முதியோர் இருவரும் தமது வழக்கையெடுத்துரைத்தனர்; உரைத்து விளக்கினர்; விளக்கி வாதாடினர். வழக்கை விசாரிக்க வந்த பெரியார் அவ்விருவரது சொல்லையும் ஏழுதரம் கேட்டார்; ஆழமாகச் சிந்தித்தார். அவர்கள் கூற்றைக் கொண்டே தீர்ப்பைவழங்கினார். அவர்கள் அத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டனர்; நியாயமான தீர்ப்பு இதுஎன்பதனை அவ்விருவரும் ஒப்புக்கொண்டனர். தீர்ப்பு வழங்கிய பெரியாரின் நுண்ணிய மதியையும் திண்ணிய அறிவையும் எண்ணி வழக்காடிய முதியவர்கள் வாயாரப் புகழ்ந்தனர்; நீதிபாலிக்கும் திறத்தைக்கண்டு மகிழ்ந்தனர்.

வழக்காடியவர்கள் தமது தீர்ப்பை ஒருமித்து ஏற்றுக் கொண்டனர் என்பதை உணர்ந்த அப்பெரியார் உடனே தமது நரைமுடியைக் கழற்றினார்; வெண்தாடியை நீக்கினார்; ஊன்றுகோலினை ஒருபுறம் வைத்தார்; இதுவரை நேரமும் கூனியிருந்தவர், இப்பொழுது அரியணையில் நிமிர்ந்து அமர்ந்தார். என்னே ஆச்சரியம்! அவர் வேறுயாருமல்லர் முன்பு இருந்த இளையவனேதான் மன்னன் கரிகாலனேதான்.

புன்முறுவல் பூத்தவாறு புதுக்கோலக் கரிகாலன் அரியணைமீது வீற்றிருந்தான். "கரிகாலனே முதுவடிவு தாங்கித் தமக்குத் தீர்ப்பு வழங்கியவன்' என்பதை உணர்ந்த முதியவர்கள் வெட்கித் தலைகுனிந்தனர். அவர்களுள் ஒருவர் 'மன்னவா! நீ இளையவன் என்றும் எமது வழக்கைத் தீர்க்கும் திறன் நின்னிடத்தில் இல்லையென்றும் நாம் நினைத்தது உண்மையே. எமது உள்ளக் கருத்தை உடனே புரிந்துகொண்டு உள்ளே சென்று நரைவடிவு தாங்கிவந்து எமக்கு உரை முடிபு கூறினை. நின் திறமையை நேரிலேயே நாட்டினை. 'உருவு கண்டு எள்ளார் அறிவுடையோர்' என்பது முதுமொழி. அதற்கு மாறாக நினது தோற்றத்தைக் கண்டு நினது ஏற்றத்தைக் குறைத்து மதித்தோம். முன்பு நின்னை அவமதித்தோம். இப்பொழுது நாமே அவமானம் அடைந்துள்ளோம். அறிந்த பிழைக்கு வருந்துகின்றோம். நின் திறன் பெரிது! நின் புகழ் வாழ்க!' என்றார்.

மற்றைய முதியவர் கூறினார்: 'சோழர் குலக் கொழுந்தே! திருமாவளவ' நின் குலப் பெருமை சொல்லுந்தரமன்று. குலவித்தை கல்லாமலேயே கைகூடுமன்றோ! மீன்குஞ்சு நீந்தவும் புலிக்குட்டி பாயவும் பாடம் கேட்பதுண்டோ? நீ ஆண்டிலே இளையோனாயினும் அறிவிலே முதியவன். நீதி செலுத்தும் நேர்மையில் நீ நிகர் அற்றவன். எமது அறியாமையை நீக்கி அகந்தையைப் போக்கினை. வளவர் திலகமே! நின்னைப் போன்ற ஓர் அரசனை இச்சோழநாடு இதுவரை கண்டதில்லை. நின்னை மன்னனாகப் பெற யாம் செய்த தவமே தவம். வாழ்க நின் கொற்றம்! வளர்க நின் திறம், விளங்குக நின் புகழ்!'

கரிகாலன் ஏறத்தாழ கி. பி. முதல் நூற்றாண்டிலே சோழநாட்டை ஆண்ட சிறந்த மன்னன். இவன் இளவயதிலேயே அரசுரிமை பெற்றுத் தனது மதிநுட்பத்தாலும் வல்லமையாலும் சோழநாட்டைச் செவ்வனே ஆண்டு வந்தான். இவன் ஆட்சிக் காலத்திலே சோழ நாட்டில் வளம் பெருகி வாழ்வு சிறந்ததால் இவனைக் கரிகாற் பெருவளத்தான் என்றும் திருமாவளவன் என்றும் ஆன்றோர் போற்றினர். வளவன் என்றால் சோழன் என்று பொருள். சோழன் கரிகாற் பெருவளத்தான் கூரிய புத்தியுடையவன்; பார் வேந்தர் பலரைப் போரிலே வென்ற பெருவீரன்; தமிழின் பெருமை அறிந்து அதனை வளர்த்தவன். அவனது மேம்பாட்டைப் பல புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். மேலும் இவனைத் தலைவனாகப் போற்றிப் பொருநராற்றுப்படை என்ற நூலில் முடத்தாமக்கண்ணியார் பாடியுள்ளார். கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பட்டினப்பாலை என்ற நூலுக்கும் கரிகால் வளவனே பாட்டுடைத் தலைவன் ஆவன்.

வைத்தியர்களுக்கு

ஆயுள்வேத மருந்துக்கூட்டு சபை
(CEYLON AYURVEDIC DRUG CORPORATION)
இறக்குமதி செய்து விநியோகிக்கும்
மருந்துச் சரக்குகளும்
நாவின்ன
ஆயுள்வேத ஔடதசாலை
(AYURVEDA DRUG FACTORY)
தயாரிப்பு மருந்துகளும் அறிமுகஅட்டை பேரில்
கட்டுப்பாட்டு விலைகளில் யாழ்ப்பாணத்தில்
கிடைக்குமிடம்:

சுந்தரம் பிறதர்ஸ்
73; மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

# 'சித்தூர்' பேசுகிறார்

'இசை மன்னர், இசைப் பேரறிஞர், சங்கீத கலாநிதி' போன்ற பல பட்டங்களைப் பெற்றவராகிய திரு. சுப்பிரமணியம்பிள்ளை, தான் முதன் முதலில் 1937-ம் ஆண்டு இலங்கைக்கு வந்திருந்தபோது யாழ்ப்பாணத்தில் கேட்ட இசைக் கச்சேரிகளிலும் பார்க்க இப்போது சிறிதளவு கேட்கக்கூடிய தாக கர்நாடக சங்கீதம் வளர்ச்சியடைந்துள்ளதென்றும் ஈழத்து மாணவர்கள் பலர் தமிழகத்திற்குச் சென்று அங்கு இசைபயின்று யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி இசையைப்பரப்பிய படியால் இவ்விதமாக வளர்ச்சியேற்பட்டதாகவும் தெரிவித்தார்.

### வயதுபோன 'இளைஞர்'

இப்போது 71 வயதாகும் திரு. சுப்பிரமணியம்பிள்ளை தற்போது சுன்னாகம் இராமநாதன் அக்கடமியில் அதிபராகக் கடமையாற்றி நல்ல மாணவர்களை சிறந்தோர் இசைப்பரம்பரையை யாழ்ப்பாணத்தில் உருவாக்கிவருவது போற்றுதற்குரியது. இப்பேற்பட்ட பெரியாரைக் காண்பதற்காக, இசையன்பர்கள், மிருதங்க வித்வான் திரு. எம். என். செல்லத்துரை, நில அளவையாளர் திரு ஆ. சிவானந்தன் ஆகியோருடன் சென்றிருந்தேன்.

ஒரு சிறுமேடை. அதனருகே தம்பூரா. ஸ்ரீதியாகப் பிரம்மத்தின் திரு உருவப்படம் இப்படியான நல்ல காட்சிகளைக்கொண்ட அறையில் நாம் இருக்கின்றபோது தமிழகத்தில் ஓர் இசைப் பெருமகனின் பக்கத்தே அமர்ந்திருப்பது போன்ற உணர்வுதான் எனக்கேற்பட்டது. நான் அவரிடம் 'கலை அரங்கத்துக்காக' சில கேள்விகளைக்கேட்டேன். பதில்களைப் 'பட் பட்' டென்று சொன்னார்

கேள்வி: தாங்கள் யாரிடம் இசை பயில ஆரம்பித்தீர்கள்?

பதில்: எனது தந்தையாரிடம் இசைபயில ஆரம்பித்தேன். பிடில் வாசிப்பதிலும் பாடுவதிலும் அவர் தேர்ச்சியுடையவர்.

கே. தங்கள் குடும்பமே ஒரு இசைக் குடும்பம் போலும்?

ப. ஆமாம்! என்னுடைய குடும்பமே ஓர் இசைக் குடும்பம்தான். எனது முப்பாட்டன் நாராயணதாஸ்

## ஒரு சந்திப்பு

என்பவர், கையிலே சிப்ளாத் தாளம் ஏந்தி பஜனை செய்துவந்தார். அந்தக் காலத்தில் வீதிகளில் பஜனை செய்யும் வழக்கம் இருந்தது. அன்னாருடைய மகன் அருணாசலம் என்பவரின் புதல்வர்தான் எனது தந்தையாகிய வேங்கடப்பா, அவரை எல்லோரும் பேரறிஞர் என்றழைப்பார்கள். புங்கனூர் சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்வானாகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

### 5 வயதில்

கே. நீங்கள் எத்தனை வயதில் இசை பயில ஆரம்பித்தீர்கள்?

ப. எனக்கு 5 வயதான போது தந்தையார் எல்லோருமாகச் சித்தூர்வந்து குடியேறிவிட்டோம். ஐந்து வயதில் இருந்தே எனக்குத் தந்தையார் இசைப்பயிற்சி அளித்துவந்தார்.

கே: தாங்கள் எத்தனையாம் வயதில் இசைக் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தீர்கள்?

ப: பன்னிரண்டாம் வயதில் இசைக்கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தேன். சுமார் 16வயதுவரை தனிப்பட்ட கச்சேரிகள் செய்து வந்தேன். அப்போது, என் மனதில் திருப்தி ஏற்படவில்லை. நான் செய்கின்ற கச்சேரிகள் தராதரம் போதாது என்றெண்ணிக் கவலைப்பட்டேன்.

கே: அதன்பின் யாரைக் குருவாகக் கொண்டீர்கள்?

ப: சென்னை ஜோர்ஜ் டவுன் என்ற இடத்தில் நடைபெற்ற ராமநவமி தினத்தன்று இசைக்கச்சேரி செய்வதற்காக காஞ்சிபுரம் திரு. நயினாப்பிள்ளை என்பவர் வந்திருந்தார். அவருடைய கச்சேரியைக் கேட்டேன். ஆனால் அவருடைய இசைக்கச்சேரி என் மனதிற்குப் பிடிக்கவில்லை. அவரிடம் இசை பயில என்மனம் முதலில் விரும்பாமல் விட்டது. ஏனெனில், அவர்பாடுகின்ற போது, "பல்லவி. சுரம், நிரவல் எல்லாமே தந்தாக்காரம் போன்றுதான் இருந்தது. அது அப்போது என் மனதிற்குப் பிடிக்காதிருந்தது. ஆனால், மேற்படி கச்சேரிநடைபெற்ற ரமணச்செட்டியார் என்பவருடைய வீட்டிலேயே நான் வசித்து வந்தேன். ஒருநாள் ராமஉற்சவத்தின் போது பாடுவதற்கு வாய்ப்புக்கிடைத்தது. அக் கச்சேரியின் பின்னர் சில நாட்கள் கழித்து திரு நயினாப்பிள்ளை அவ்விடம் வந்தார். அப்போது என்னைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். நான் பாடிக்காட்டினேன். என் பாட்டைக் கேட்டதும் என்மீது அவர் அளப்பரிய பற்றுக்கொண்டார். என்னையும் தன்னுடன் காஞ்சிபுரத்துக்கு அனுப்பி விடும்படி ரமணச்செட்டியாரிடம் கூறினார் ஆனால் நான் அடியோடு மறுத்தேன். இருந்தும் இசையுலகில் என்னைத் திகழச் செய்யக் குருவாக வாய்த்தவர் திரு நயினாப்பிள்ளை அவர்களே என்பதில் களிப்படைகின்றேன்.

## எஸ். ஆர். திருஞானசம்பந்தன்

### கஷ்டங்கள்

கே: தாங்கள் வாழ்க்கையில் ஏதாவது கஷ்டம் அனுபவித்திருக்கிறீர்களா?

ப: ஆம்! இப்போதும்என் மனதில் நிழலாடிக்கொண்டிருக்கின்றது கச்சேரிகள் இல்லாத காலம் அதாவது ஒரு ஆடிமாதம், 25ரூபா தேவையாக இருந்தது. என்னாலே பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அப்போது திருமணம் செய்திருந்த காலம். பசி, பட்டினி, என்றும்வாடவேண்டிய கஷ்டமாகவும் இருந்தது அது. ஆனால் இருளின் பின் ஒளி பிறக்காதா என்ன?

கே: தங்கள் இசை வாழ்வில் மறக்கமுடியாத சம்பவம் ஒன்று குறிப்பிடுங்கள்?

ப: எனது குருநாதரிடம் இசை பயில்கின்ற காலத்து, அவர் சின்னக் காஞ்சிபுரம் சென்றிருக்கின்ற சமயங்களில் தனியாக, அறையிலே இருந்து நான் பாடிக்கொண்டிருப்பேன். அப்போது அவர்கள் "நயினாப்பிள்ளை பாடிக் கொண்டிருக்கிறார்" என்றெண்ணிக் கொண்டு வந்துவிடுவார்கள். பின்னர் என்னைக்கண்டதும் திரும்பி விடுவார்கள். அப்போது எனக்கு எனது குருநாதன் போன்ற சாரீரம் இருந்தது தான் காரணம்.

கே: இசைத்துறையில் தாங்கள் வகித்த பதவிகள் எவை?

ப: 1947-ம் ஆண்டு முதல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைக் கல்லூரியின் அதிபராகப் பதவி வகித்தேன். பின்னர் சென்னை மத்திய கர்நாடக இசைக் கல்லூரியிலும், திருப்பதி இசைக்கல்லூரியிலும், திருவையாறு இசைக்கல்லூரியிலும் அதிபராகப் பதவி

(11-ம் பக்கம் பார்க்க)




## 'குத்து விளக்கு' பற்றி ஒரு கண்ணோட்டம்

# ஈழத்தமிழர் வாழ்வை படம் பிடித்து காட்டத் துடிப்பவர் வி. எஸ். ரி.!


(சென்றவாரத் தொடர்)

இந்நாட்டில் வாழும் தமிழ்ப்பேசும் மக்கள் அத்தனைபேரையும் தவறுமல் பார்ப்பதற்கு கட்டாயப்படுத்தும் ஒரு சூழ்நிலையை இப்படம் வெளியான ஒரு சில தினங்களில் நாம் அவதானிக்க முடியும் என்பதை இப்பொழுது மக்கள் மத்தியில் நிலவும் கருத்தில் இருந்து தெரிந்துகொள்ளலாம். திரும்பத் திரும்ப ஒரேவிதமான பாணியில் அமைந்த படங்களைப் பார்த்த கண்களுக்கு 'துலாபாரம்', 'செம்மீன்' போன்ற படங்கள் எப்படி புது உணர்ச்சியை ஏற்படுத்தினவோ அதுபோலத்தான் திரு வி. எஸ். ரி. அவர்களது படமும் மக்கள் மனத்தில் புது உணர்வொன்றைக் கொடுக்கப்போகின்றது. அந்த உணர்வைக் கட்டிக்காத்து வளர்ப்பதில்தான் எமது இலங்கை இரசிகப் பெருமக்களின் கடமை நிறைந்துள்ளது. ஈழத் தமிழனின் கலைவாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் படங்களையே பிற நாடுகளில் எதிர்பார்க்கின்றார்கள். நமது இந்திய தமிழ்ச் சகோதரர்களும்கூட எம் நாட்டுப் பழக்கவழக்கங்களையே எமது நாட்டுப் படங்களில் எதிர்பார்ப்பார்கள் என்ற உண்மையை எவரும் ஒப்புக்கொள்வார்கள், ஏன், அவர்கள்கூட தாங்கள் தயாரிப்பது போன்ற படங்களை நாமும் தயாரித்தால் ஏற்றுக்கொள்ளத் தயங்குவார்கள், இதற்குப் பல முக்கிய காரணங்கள் உண்டு. மலேசியா போன்ற நாடுகளில் வாழும் மக்களும் ஈழத்தின் கலைகலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் படத்தை முழுமனதுடன் ஆதரித்து அந்நாடுகளிலும் எமது படங்கள் 'வெற்றி முரசு கொட்டுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவார்கள் என்பதை எனது மலேசிய நண்பர்கள்மூலம் நேரிலும் கடித மூலமும் அறிந்தேன் என்பதைப் பணிவுடன் தெரியத்தருகின்றேன்.

### தயாரிப்புச் செலவுகள்

திரு. வி. எஸ். ரி. அவர்கள் படத்துறைக்கு வந்து செயலாற்றுவதைத் தொடர்ந்து பல பணப்பலம் படைத்தவர்கள் முன்வரவேண்டும் இத்துறையை வளர்ப்பதற்கு இக்கருத்தை அடிக்கடி அவர் எங்களிடம் கூறிக்கொள்வார். சிக்கனமாகச் செயலாற்றினால் ஒரு தமிழ்ப் படத்திற்குப் போடும் பணம் திரும்பவும் கையில் வந்து கட்டாயம் சேரும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் தமிழ்ப்படம் தயாரிக்கவந்தால் முடிந்தவரைக்கும் சிக்கனத்தைக் கையாளவேண்டும்.

'குத்துவிளக்கை'ப் பொறுத்தவரையில் படத்தின் தரத்தை உயர்த்துவதற்காக (சில காரணங்கள்-குறிப்பிட விரும்பவில்லை) பல சமயங்களில் பணம் வரம்புமீறிச் செலவாகின்றது உண்மை. எந்தக் காரணத்தாலும் தொழில் நுட்




பப் பகுதத்தில் படம் சோடை போய்விடக் கூடாது என்ற திடமான எண்ணம் தயாரிப்பாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும் இருக்கின்றது. நேரம் தாமதமானாலும் பரவாயில்லை காமிராவுக்கு 'புதிசு' ஆனவர்களாகிய எங்களை நல்ல முறையில் பயன்படுத்தி நன்கு நடிக்கவைக்கும் பணியில் அரும்பாடுபடுகின்றார் நெறியாளர். காமிராவை முடுக்குவதுமட்டுமல்ல நடிகர்களது நடிப்பை அதே நேரத்தில் கவனித்து அவர்களை நெறிபடுத்தும் பணியிலும் ஈடுபட்டிருப்பதால் இருவேலைகளை ஒரே நேரத்தில் கவனிக்கவேண்டியுள்ளது. திரு. டபிள்யூ. எஸ். மகேந்திரன் அவர்களுக்கு.

படத்தின் தரத்தை உயர்த்துவதற்காகத் திரு. வி எஸ். ரி. அவர்களும் திரு. டபுள்யூ. எஸ். எம். அவர்களும் அரும்பாடுபடுகின்றனர். அண்மையில் சிலோன் ஸ்ரூடியோவில் சில "கால் ஷீட்டுகளில் முடித்து விடலாம் என்று திட்டமிடப்பட்ட காட்சிகள் அதைவிட இருமடங்கு கால் ஷீட்டுகளையும் தாண்டி அதற்கு மேலும் ஆகிவிட்டன அப்பொழுதும் தயாரிப்பாளர் என்ன கூறினார் தெரியுமா? 'படம் நன்றாக அமைந்துவிட்டால் எனக்கு அவ்வளவும் திருப்தி' என்கிறார்.

இதிலிருந்து எனக்குத் தெரிவது என்னவென்றால் நல்லதொரு தமிழ்ப்படத்தை இலங்கையில் தயாரித்தோம் என்ற அந்த மனத்திருப்தியை தான் எதிர்பார்க்கின்றார் தயாரிப்பாளர். இலங்கையில் தமிழ்ப் படம் வெற்றியாகத் தயாரிக்க முடியாது என்ற பல பெரிய மனிதர்களின் மனதில் இருக்கும் அந்தத் தவறான எண்ணத்தை உடைத்தெறியவேண்டும் என்பது தான். இலங்கையிலும் தமிழர்கள் இருக்கின்றார்கள். அவர்களது வாழ்க்கையைப் பற்றிச் சொல்ல இதுபோல் பல படங்கள் வரவேண்டும் என்ற ஆசை கொண்டவர் திரு. வி. எஸ். ரி அவர்கள்!

### மக்கள் ஆதரவு

இலங்கையில் இதற்குமுன் வெளிவந்த ஆறு படங்களைக் காட்டிலும் பல வசதிகளுடன் இப்படம் உருவாகின்றது என்பது உண்மை. ஈழத்தவர்களும் அறிவார்கள். எனினும் இதுவரிசையில் 7-வது படம். ஆனால் தரத்தில் உயர்வான நிலையில் உள்ளது. அப்படி நல்ல முறையில் வெளிவரும் படத்தை அத்தனை தமிழ் மக்களும் பார்த்து அதற்கு ஆதரவு கொடுக்கவேண்டியது எமக்கள் ஒவ்வொருவரது தலையாய கடமையும். நாளைக்குப் பார்ப்போம் என்றோ அல்லது மற்றவர் பார்த்துவிட்டுவந்து சொல்லட்டும் அதன் பின்னர் செல்வோம் என்ற பின்போடும் மனப்பான்மையை விடுத்து, இது எங்கள் முயற்சி இலங்கையில் உதயமாகும் புதுத் தொழில், வேலையில்லாத் திண்டாட்டத்தை இத்தொழில் வளரும்பட்சத்தில் ஒரு படி குறைக்க உதவும் என்ற உள்ளுணர்வுடன் சென்று பார்த்து இப்படத்தின் பெரு வெற்றிக்கு ஈழத்தவர் எல்லோரும் காரணமாக இருக்கவேண்டும், அப்படி இருந்து வெற்றியின் பங்கை நாமும் எல்லோரும் பகிர்ந்து கொள்வோம் என்று எண்ணி படத்தின் வெளியீட்டு விழாவை எதிர்பார்த்திருப்போமாக.

# வாழும் பிள்ளையை . . .

## இன்சொலால் அன்றி வன்சொலால் குழந்தைகளைத் திருத்திவிட முடியுமா?

வை. ஆனந்தநடராஜா

உளவியல் நிபுணரென்று சொல்லக்கூடியவர்கள் தாமும் மாணவர்களுக்குத் தாம் படிப்பிக்கும் பாடங்களில் நல்ல பெறுபேறு பெறத் தவறிவிடுகின்றனர். மனஇயற்பாடத்திற்பட்டம் பெற்றவர்கள் பலர் வகுத்தவர்கள் கூட வாழ்க்கை முறையில் தம் குழந்தை வளர்ப்பிலே கணிசமான பேறுபெறமுடியாமற் கவலை அடைந்திருப்பர். இது எதனால்? இயற்கையையும், மரபையும், சூழலையும் கைவிட்டுத் தமது வித்தக அறிவிற்பெற்ற 'உளவியல்' புத்தகஞானத்தால் கண்ட பலனே என்ப.

'ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது' என்பது உளவியலில் எவ்வளவு பொருத்தமுடைத்து! ஒருவர் தம் குடும்பத்தில் அனுபவமூலமாகவோ, பயிற்சிமூலமாகவோ, வம்சாவழியாகவோ, பழக்கவழக்கமாகவோ பெற்ற உளவியல் அறிவே சிறப்புடைத்து என்னில் அதுவே சாலும்.

பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களிலும் பயிற்றப்படாத சில பட்டதாரிகள் சிறப்பாகக் கல்வியூட்டலை நாம் அனுபவாயிலாகக் காணாமல் இல்லை. இங்ஙனமே பயிற்றப்பட்ட ஆசிரியர்களிலும் சிறப்பாகப் பயிற்றப்படாத ஆசிரியர்களும் இருக்கிறார்கள். பயிற்சி பெற்றாலென்ன? பெறாவிட்டாலென்ன! ஆசிரியர்களிடத்து அமையவேண்டிய பண்பாடுகள் அவர்கள் மாணவர்களாக இருந்த காலத்திலும் ஆசிரியர்களிடம் படித்த அனுபவத்தால் பெற்றிருப்பர் என்னில் மிகையாகாது.

### இளம் உள்ளம் புரியக்கூடிய சூழல்

நடுத்தர அல்லது வறிய குடும்பத்துக் குழந்தைகளில் அனேகர் கல்வி ஆர்வம் கொண்டவர்களாய் இருப்பார்கள். அவர்கள் வீட்டு வேலைகளைச் செய்வார்கள்; கடைக்குப்போய் வீட்டுச் சாமான்களை வாங்கிவருவார்கள். செய்முறை அறிவைப் பெற இவர்களுக்கு வாய்ப்புண்டு. அளவைகள், கணிதம், உசாவல், தெரிதல் முதலிய அம்சங்களில் அனுபவ அறிவை நாளும்பொழுதும் பெற்றிருப்பார்கள். உலகியல், உளவியல் அறிந்த செல்வந்தரான சில பெற்றோர்கள் வீண்செலவுகள் செய்யாமல் வீட்டுவேலைகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துவர். இதனால் இப்பிள்ளைகளும் நல்ல அனுபவம்பெறுகின்றனர்.

உளவியலில் சிறப்பான பட்டம் பெற்றவர்களிலும் வெவ்வேறு துறைகளில் வாழ்க்கை நடத்திய பெற்றோர் மதிநுட்பமுள்ள பிள்ளைகளை ஆக்கினர் என்னலாம். உதாரணமாக உலகமேதைகளான சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில், சேர் சி.வி. இராமன், இரவீந்திரநாத தாகூர் என்பவர்களின் பெற்றோர் மேற்சொல்லியவாறு வெவ்வேறு துறைகளில் வாழ்ந்தவர்கள்; இயற்கையான பாங்கில் பாரம்பரியமான உளவியலைச் செவ்வனே அவர்கள் கையாண்டிருக்கலாம். இளமையுள்ளம் புரியக்கூடிய சூழலை அமைக்க வேண்டும். சிந்திக்கவும் செயற்படவும் பயிற்றவேண்டும். எந்நேரமும் பொன்னேரமாக சுருவான செயல்களை உருவாக்க வேண்டும், குழந்தைகளின் உள்ளம் எதையும் செய்யும் அவாவும் ஆற்றலும் உள்ளவை. அவர்களின் உள்ள ஆர்வங்களையும், உணர்ச்சிகளையும் நன்கு கவனித்து தக்க பயிற்சி அளித்தால் அவர்கள் அறிஞர்களாய் நாடுகளுக்கும் நல்லோராய் விளங்குவர்.

மனிதசமூகம் பெற்றோர்-பிள்ளைகள், குரு-சிஷ்யர், அரசன்-அரசவை, பிரஜை ஆண்டான்-அடிமை என்ற தொடர்புகளால் பிணைக்கப்பட்டுப் பலவித உளவியல் பண்பிலும் முறையிலும் வளர்ந்து வந்துள்ளது.

### மேலை நாட்டில்

இன்றைய உலகத்திலே நாகரிகம் வளர்ந்ததெனக் கருதப்படும் மேலை நாடுகளில் பெற்றோர் பிள்ளைகள் தொடர்பு எவ்வாறு உள்ளது? பிள்ளைகள் வளர்ப்பு நிலையங்கள் தோன்றிய இம் மேலைநாடுகளிலே பிள்ளைகளை அந்நிலையத் தாதிமார்களிடம் வளர்க்க ஒப்படைக்கும் வழக்கம் எழுந்துள்ளது. பிள்ளைக்குத் தாய் தந்தையரைத் தெரியாது. தாதிதான். ''இவள்தான் அன்னை; இவர்தான் உன் தந்தை'' என்று அறிமுகம் செய்துவைப்பாள். பெற்றோர் பிள்ளைகளை தங்கள் வசதிக்கேற்ப ஒருவயதிலோ அல்லது 5, 10 வயதிலோ விரும்பினால் வந்துபார்த்துச் செல்வர். தாய் பிள்ளையை அறியாத நிலை, பிள்ளை தாயை அறியாதநிலை நம் நாட்டில் பொதுவாக இருந்ததில்லை; பாரம்பரியமாக வந்த பெற்றோர் பிள்ளைகளை வளர்க்கும்முறை உலகம் உவக்கும் உத்தமமுறையல்லவா?

### அன்னையின் பொறுப்பு

ஒரு பிள்ளை தாயின் தொடர்பையே முதலில் அறிகின்றது. தாயின் அரவணைப்பில் வளர்ந்ததே சிசு. தந்தை குடும்பப்பொறுப்பைக் கவனிப்பாரேயன்றி அவர் பொறுப்பு நேரடியாக இல்லை. சிசுவினிடத்து அன்னையவள் பொறுப்பே அளப்பிலது 'தாயைப்போலப் பிள்ளை நூலைப்போலச்சேலை' என்றபடி. ஒரு பிள்ளை தாயைப்போலக் குணமுடையவளாகவும் சிறப்புடையவளாகவும் வருவாள். சேலையின் ரகம் நூலில் இருப்பது போல பிள்ளையின் தன்மை அன்னைப்பெற்ற தாயைப் போல அமையும்.

எவருடனும் இனிமையாகவும் அன்பாகவும் பழக வேண்டுமென்பது உலக நியதி 'இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலாலென்றும் மகிழாதே' இது ஆன்றோர் வாக்கு. நாம் இதனைக் குழந்தைகள் விஷயத்தில் அத்தியாவசியமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அவர்களுக்குத் தக்ககாரணம் காட்டி அன்பாற்பெறுவதை அதட்டிப் பெறமுடியாது. பொய் சொல்லும் குழந்தையைத் தாலும் திருத்துவது அன்பாலும் நல்லுரையாலுமே சாலுமன்றிவேறுவழி குறிப்பிட்ட பலன் அளிக்காது. பெற்றோரிடம் பிள்ளைகள் சகஜமாகப் பழகவேண்டும். சில பெற்றோரிடம் குழந்தைகள் பயத்தினால் உள்ளதை மறைத்து இன்னொன்றைச் சொல்கின்றன. ஆசிரியர்களும் பிள்ளைகளைத் தம்முடன் தாராளமாகப் பழகவைத்தல் வேண்டும். அதற்கேற்பச் சூழ்நிலையை வகுத்தலும் அவசியம். பெற்றோர்களும் ஆசிரியர்களும் சிறந்த குணநலன்கள் பொருந்தவாழ்தல் அவர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். பிள்ளைகள் நல்ல நண்பர்களுடன் பழகவேண்டும். ஒருவர் மனத்தை மற்றவர் நோகச்செய்தல் ஆகாது.

தீய நெறியில் இடப்பட்ட சிறார் மற்றுஞ் சிறுமரையும் அவ்வழியில் சுலபமாக நடத்தக்கூடும். ஒரு பிள்ளையின் வாழ்விலே அவன் எதிர்காலத்திலே எத்தகைய மனிதனுவான் என்று சொல்லக்கூடும். சிறு பிள்ளையில் அவன் செய்யும் ஆக்கமுயற்சியைக் கண்டே இவ்வாறு கணிக்கக்கூடும்.

'வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்' என்பது இதனைக்குறிக்கும். நமது சமூகம் பங்கிப்பெருகிவரும் இந்நாளிலே நம் சிறார் பலவித அழிவுப்பாதையில் நடாத்தப்பட இடமுண்டு. பெற்றோரும் ஆசிரியரும் தம் சிரமேற்கொண்டு சிறாரைப் பயிற்றி நாட்டின் நன்மக்களாக்குதல் வேண்டும்.

### பாலியக் குற்றவாளிகள்

பாலியக் குற்றவாளிகள் செய்யுங் குற்றங்களுக்காக தண்டனைபெறுமுன் 'உளவியல்' முறைக்கிணங்க ஆராயப்படுவார்கள். அவர்கள் குறித்த குற்றங்களை ஏன் செய்தார்கள்? செய்ய வேண்டிய அப்படிச் சந்தர்ப்பமென்ன? பழகிய பழக்கமா? குடும்பத்தில்பெற்றோர்கள் பழக்க வழக்கமெப்படி? அவர்கள் சேர்க்கை எப்படியிருந்தது? குட்டு ஆயின் தன் வறுமையின் நிமித்தம் செய்ததா? அல்லது இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? மனநோய்க் காரணமா? என்ற பல ரீதியில் ஆராயப்படுவர். குறித்த உத்தியோகத்தர் இவ் வாராய்ச்சியின் உண்மைகளையும் நீதிபதிக்குச் சமர்ப்பிப்பர். நீதிபதி அவற்றைச் சீர் தூக்கிப்பார்த்து ஏற்ற தீர்ப்பை வழங்குவர். குறித்த பாலியக்குற்றவாளிகளை விசாரிக்கும் உத்தியோகத்தர் நேர்மையும் அன்பும் கருணையும் கண்ணியமும் வாய்ந்தவராக இருக்கவேண்டும்.

மனநோய் நிபுணர் ஒரு நோயாளியின் நிலையைச் சம்பாஷணைமூலம் அவரது மன ஒப்புதலைப்பெற்றுச் சிகிச்சை அளிப்பர். மனநோய் நிபுணர் நுட்பமான மன இயல்பையும் உளத்தின் அவலத்தையும் நுணுகி ஆராய்ந்த பேரறிவாளராயிருப்பர். ஒருவனுக்கு மனத்திலே ஏற்பட்ட தாக்கங்களை அறிந்து நிபுணர் குறித்த நோயாளியின் அபிலாஷைகளை அறிந்து அவை நிறைவேற்றக்கூடியவையாயின், அவற்றை நிறைவேற்றி வைக்கும்படி பெற்றோரைவேண்டுவர். இது தக்க பரிகாரமாக அமையலாம்.

### குழுப் பயிற்சி

மாணவர்களின் உளவியல் புலனின்படி குழுக்களாகச் செய்யும் பயிற்சிகளும் முயற்சிகளும் உன்னை குழு முயற்சிகளால் ஒற்றுமையும் குறிக்கோளும் வளரும். சர்வகலாசாலை மாணவர்கள் உல்லாசக் குழுக்களாகச் சேரும்போது 'கேலிக்கை' செய்வதில் ஈடுபடுகின்றனர், அண்மைச் சேதிகளில் இக்கேலிக்கைகள் சில மாணவர் மனத்தையும் அவர்தம் பெற்றோரையும் புண்படுத்தியுள்ளன. கேலிக்கைகள் சமூகம் ஏற்பனவாக பண்பட்ட முறையில் அமைய இருப்பது நம்மவர் விரும்பக்கூடியதே. குறிப்பிட்டஓர் ஆசிரியர் அல்லது தலைவனின்கீழ் குழு முயற்சிகளில் ஆக்கம் பலகாணலாம் நோக்கமின்றித் தாமே இயங்கும் குழுக்களாகப் பலவிதத் தாக்கங்களையே குறிப்பிடலாம்.

நாடகம் படம் ஆடல் பாடல் துறைகளை எடுத்தாலும் இதில் மக்கள், இளைஞர் சிறார், தமிழையர், தம்பியர் விரும்புவது என்ன என்று உளவியல்அடிப்படையில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளே வெற்றியீட்டுகின்றன, மக்களைப் பரவசப்படுத்துகின்றன மக்கள் தம் உளப்போக்கை அறிந்த இயக்குநரும் நடிகருமே தம் முயற்சியில் வெற்றி காண்கின்றனர் புகழும் பெறுகின்றனர்

### ஆசிரியருக்கு உளவியல் பயிற்சி

ஆசிரியர்கள் பெறும் பயிற்சிகளில் உளவியல் முக்கியமானது. பிள்ளைகளின் குணஇசைவுகள், படிப்பிக்கும் விஷயங்களைக் கையாளும் முறை இன்னவற்றைக் கொண்டவராகும், கவர்ச்சிகரமாக வர்ணித்துக் கூறுதல், விளக்குதல் மூலம் பிள்ளைகளை ஆலோசிக்கவைத்தல் திரும்பத்திரும்பக் கூறுதல், மாதிரிப்படி பயிற்றுதல் என்பன போன்ற அம்சங்களாகும்.

பாடசாலைகளில் மாணவர் வரலாற்று ஏடு வைக்கப்படுகிறது. இதில் ஒவ்வொரு

(10-ம் பக்கம் பார்க்க)

---

[22]

'உங்களைப் பார்க்க எனக்கு ரொம்பச் சந்தோஷம். உங்களை இப்ப கூப்பிட்டது இதைச் சொல்லவல்ல. குருசாமி படிச்சமனிசன்போலை தெரியுது. இங்கை எப்படி வந்து சேர்ந்தாரோ தெரியாது. எங்கடை வாசிகசாலைக்கு இண்டுமுதல் நீதான் பொறுப்பு. சோமு உனக்கு அஸிஸ்டன்ட்'.

மறுபடியும் அவர் இவர்களைப் பார்த்துச் சிரித்தார். முகத்துக்கு வெளியே பயங்கரமாக உருண்டுகொண்டிருக்கிற அவரது சிவந்த கண்களும் அப்பொழுது சாந்தத்தில் தோய்ந்து சிரித்து நின்றன.

நூல்நிலையத்துக்கு வருகிற கைதிகள் மிகக் குறைவு. அங்கு வருகிறவர்கள் கூட ஒரு தேவாரப் புத்தகத்தையோ - ஒருசிறு கதைப் புத்தகத்தையோ இரவல் வாங்கிக் கொண்டுபோய்விடுவார்கள். வரலாறு, சமூகம் அரசியல், சமயம், தத்துவம் சம்பந்தமாக அங்கேயிருந்த நூல்கள் எல்லாம் ஆரம்பத்தில் சோமுவுக்குப் புரியாத பண்டங்களாகவே இருந்தன. குருசாமியின் விளக்கங்கள் - அறிமுகப்படுத்தி வைக்கிற விதங்கள் எல்லாம் கொஞ்சங்கொஞ்சமாக சோமுவைக் கவர ஆரம்பித்துவிட்ட பிறகு அவன் அந்த நூல்களில்சிறிது சிறிதாகத் தன்னை இழந்து விடுகிற நிலைமைக்கு வந்து விட்டான்.

குருசாமி இவ்வளவோடு நின்றுவிடவில்லை. நீ படிக்கிறதுமட்டும் போதாது. மகனே, சுயமாகச் சிந்திக்க வேண்டும். உன் மனதிலே தோன்றுகிற புதிய கருத்துக்களை எங்காவது எழுதிவைத்துக்கொள், அது உன்னை மட்டுமல்ல மற்றவர்களையும் வழிநடத்த உதவும்' என்று இரண்டு மூன்று பெயரிக் கொப்பிகளையும் ஒரு பேனாவையும் கொடுத்தபோது சோமுவுக்கு அவர் வெறும் கைதியாகவோ - வெறும் மனிதராகவோ தோன்றவில்லை.

"என்னை மனிதனாக்க வந்த தெய்வம்".

அவனுக்கு விடுதலை கிடைக்க இன்னும் ஒரு வருஷத்துக்கு மேல் இருக்கிறது! அவர் சிறைச்சாலையைவிட்டு வெளியேறுகிறநாள் வந்துவிட்டது.

ஏதோ அவரும் வெளியேறி விடுதலைக் காற்றைச் சுவாசிக்க விருப்பமில்லாதவர் போலவே வெளியேறினார். சோமுவுக்கு தன்னிலிருந்து யாரோ தன் உயிரைப் பிய்த்து வெளியே எறிவது போலவே அவரது விடுதலை இருந்தது

அவர் சிறைச்சாலை உடைகளைக் களைந்து தன் உடைகளை அணிந்துகொண்டு தன்னை வெளியே பார்த்து நிற்கிற கைதிகளைக் கடந்து, அதிகாரிகளின் புன்னகையைத் தலையசைத்து வாங்கிக்கொண்டு வாசல்வரை சென்று திரும்பி நின்று எல்லோருக்கும் வணக்கம் செய்துவிட்டு வெளியேறிய போது சோமுவுக்கு மட்டுமல்ல அங்கே நின்ற மற்றவர்களுக்கும் சிறைச்சாலை வெறிச்சென்றிருந்தது.

இரண்டு மூன்று தினங்களின் நூல்நிலையப் பொறுப்பாளனாக உயர்ந்துவிட்ட சோமு. முகட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். பழைய நினைவுகளில் சிறைப்பட்டுவிட அவன் விரும்பவில்லை யாயினும். அவனைச் சுற்றிச் சுற்றி வருகிற அவற்றை அவன் அங்கிருந்து கலைத்து விட முயலவில்லை.

"அவர் என்னை மனிதனாக்க முயன்ற குரு போய்விட்டார்!

'நான் ஏன் இங்கிருக்கிறேன்?'

'ஓ, நான் திருடன்' திருட்டுக் குற்றத்துக்காக ஐந்து வருடம் சிறைத் தண்டனை பெற்றவன். தவணை முடிந்தபின்தானே நான் வெளியே செல்ல முடியும்?'

'வெளியே சென்றபிறகும், உழுத்துப்போன சமூகத்திலே நான் திருடன்தானு? அவன் "திருடன் பட்டம் கட்டிக்கொண்ட அந்த நிகழ்ச்சி, அந்தச் சூழல் எல்லாம் அவன் உள்ளத்தின் அடியிலிருந்து முளைத்தெழுந்து, உள்ளே கிடந்தழுத்தியது.

அதை அவருக்குச்சொல்லி தான் திருடன்தானு என்பதைக் கேட்டுவிட, அவன் பல தடவை முயன்றிருக்கிறான்.

''சோமு, உன் பழைய நினைவுகள் உன்னைச் சிறை




பிடிக்கிறது மட்டுமல்ல, அவை என்னையும் சிறைப்படுத்திவிட்டால், நான் எதற்காக வாழ்ந்து கொண்டிருக்கிறேனே, அந்த நேசமும் சிறைப்பட்டுவிடும். பழைய நினைவுகள் புதிய பிரச்னைகளைப் பிறப்பித்துவிட்டால், நமக்குவிடிவேது. அந்தப்பிரச்னைகள் எங்களை அடிமைப்படுத்தி, 'எங்களை மேலும் மேலும் ஜேமதல் விடுமே தவிர மேலும் வந்துபிரச்னைகளுக்குத் தீர் காண எப்பவுமே எங்க விடாது'' என்று, அந்தச் தர்ப்பங்களிலெல்லாம்அ கூறி அவனை வேறு திசை இழுத்துவிட்டிருக்கிறார்.

ஆனாலும், பழைய நினை களுக்கு அடிமைப்படாம ருக்கிற வித்தை, அவனு இன்னும் கைவரவில்லை.

அந்த அம்பலவாண வீட்டு வாழ்க்கை அ யிட்ட நினைவுகள் கழு போல அவனுள்ளே வட் மிட்டுக்கொண்டேயிரு தன.

குருசாமி அவனை விட்டு பிரிந்துவிட்டபோது, 'நா ஏன் இங்கிருக்கிறேன்' என் வினு அவனுள்ளே பிற அவனை ஆட்டிவைக்கிறது இதற்கு முடிவு?

'இந்த நினைவுகளை மன திலேயிருந்து பிடித்து வெ யேற்றிவிடவேண்டும். இ யாருக்காவது சொல்லியா வேண்டும். ஆனால் யா குச் சொல்கிறது?'

''எவருக்குமே சொல் வேண்டிய அவசியமில் இதையெல்லாம் எங்காவ எழுதிவைச்சிட்டா. எ மனத்திலேயிருக்கிற நினைப் கள் எல்லாமே வெளி போன மாதிரித்தானே!'

இந்த எண்ணத்தில் அவ சிறைச்சாலையிலிருந்த பி

...நிறைவேற்றக்கூடி
...ர், அவற்றை
...தி வைக்கும்படி
...ரவேண்டுவர்.
...க பரிகாரமாக
...ம்.

...யிற்சி

...ர்களின் உளவியல்
... குழுக்களாகச்
...யிற்சிகளும் முயற்
... உள்ளன குழு
...ால் ஒற்றுமையும்
...ளும் வளரும். சர்வ
...ம் மாணவர்கள் உள்
...ழுக்களாகச் சேரும்
...களிக்கை' செய்த
...டுகின்றனர், அன்
...திகளில் இக்கேளிக்
...ல மாணவர் மனநி
...வர் தம் பெற்றோ
...ண்படுத்தியுள்ளன
...கள் சமூகம் ஏற்ப
...ண்பட்ட முறை
...மை இருப்பது நம்
... விரும்பக்கூடியதே
...டஓர் ஆசிரியர் ஆசி
...ளின்கீழ் குழு
...ரில் ஆக்கம் பல
...ம் நோக்கமின்றித்
...இயங்கும் குழுக்க
...வித்துத் தாக்கங்க
...திப்பிடலாம்.
... படம் ஆடல்
...றைகளை எடுத்தா
...ல் மக்கள், இவை
...ர், தமிழைவர், தம்
...ம்புவது என்ன
...வியல் அடிப்படை
...மிக்கப்படும் நிகழ்ச்
... வெற்றியீட்டுகின்
...களைப் பரவசப்ப
...றன மக்கள் தம்
...க்கை அறிந்த
...ம் நடிகருமே தம்
...ல் வெற்றி காண்
... புகழும் பெறுகின்

...ருக்கு
...ல் பயிற்சி

...ர்கள் பெரும்
...ரில் உளவியல் மூக்
...து பிள்ளைகளின்
...யங்கள். படிப்பித்
...யங்களைக் கைவ
...ற இன்னவற்றைக்
...ாககமாகும். கவர்
...க வர்ணித்துக் கூறு
...விளுவுதல் மூலம்
...ை ஆலோசிக்க
... திரும்பத்திரும்பக்
... மாதிரிப்படி பயிற்
...ிபவை போன்ற அம்
...ரும்.
...ாலைகளில் மாணவர்
...று ஏடு வைக்கப்படு
...இதில் ஒவ்வொரு
...ம் பக்கம் பார்க்க)

# பஞ்சாமிர்தம்

## ஒப்பும் உவமையும்

அறிவில்லாதவன் பேசுகை போல சத்தம் போட்டு உள்ளேசூன்யமாயிருப்பான் சுறுசுறுப்பில்லாத வித்து வான் பணமில்லாத காதலனை ஒப்பான் புத்தியில்லாத பிரயாணி இறகில்லாத பறவைபோல்வான். அனுஷ்டானமில்லாத வேதாந்தி பழமில்லாத மரத்துக்கு சமானன். கல்வியில்லாத பக்தன் கதவில்லாத வீடு போல்வான்.

—ஸுபி ஸா'தி.

## பாசத்தின் மூலவேர்

சேவா கிராமத்தில் ஒரு நாள் பத்தாண்டுகளுக்கு மேல் மகாத்மா காந்தியின் அந்தரங்கக் காரியதரிசியாயிருந்த மகாதேவதேசாயை நேசக்கி ஞாயி விச்சர் என்ற அமெரிக்க பத்திரிகையாளர் வினவினார்: 'காந்தியிடம் இவ்வளவு சக்தியும் செல்வாக்கும் எப்படி வந்தன என்பதை ஆராய முயன்று அவருடைய பாசமே அதற்கு முக்கிய காரணம் என்று முடிவுசெய்தேன். உங்கள் அபிப்பிராயம் என்னவோ?' தேசாய் அது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டார்'

'அந்தப் பாசத்தின் மூலவேர் என்ன?

'உடலோடு சம்பந்தப்பட்ட ஆசைகள் எல்லாவற்றையும் அடக்கியது.'

'காம உணர்ச்சி?'

'காமம், கோபம், குரோதம், சுய இச்சை எல்லாம் தான். காந்திஜி தாம் செய்த தவறுகளை ஒப்புக்கொள்வார். தம்மைமத்தாமே தண்டித்து மற்றவர்கள் செய்யும் தவறுகளையும் தம் தலையில் போட்டுக்கொள்வார். தமது ஆசைகளையும் இச்சைகளையும் பூரணமாக கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார். இதனால் அவரிடம் எல்லை கடந்த சக்தியும் பாசமும் எழுகின்றன.

பாசமென்பது நன்மைக்கும் இருக்கலாம், தீமைக்கும் இருக்கலாம். ஹிட்லரிடத்திலும் அளவு கடந்த பாசமிருந்தது. சாதாரண மனிதர்களைவிட ஒருவனை பெரியவனாக்குவது பாசம் தான்.

## கூல்டின் குறும்புகள்

நிக்கலஸ் கூல்டியாழ்ப்பாணத்தில் அப்புக்காத்தாயிருந்தபோது புதிதாக நியமிக்கப்பட்ட ஆங்கிலேய சுப்றீம் கோட் நீதவான் ஒருவர் கப்பல்மூலமாக காங்கேசன் துறையில் வந்திறங்கி குதிரை வண்டியில் யாழ்ப்பாணம் தோக்கி வந்தார். வழியில் சுன்னாகம் சந்தையை சுற்றிப் பார்ப்பதற்காக நீதவான் குதிரை வண்டியை தெருவில் நிற்க விட்டுவிட்டு இறங்கிச் சந்தைக்குள் போனார். இதை பார்த்த கூல்ட் அந்தகுதிரைக்காரனுக்கு நிறையப்பணம் கொடுத்து 'குதிரையை அவிழ்த்துக் கலைத்துவிட்டு நீயும் வீட்டுக்குப் போய்ச் சேர்' என்று அவனை வழிஅனுப்பிவிட்டார். நீதவான் திரும்பி வந்தபோது வெறும் வண்டிதான் நின்றது. அந்த சமயம்பார்த்து தாம் அப்பொழுதுதான் வருபவர் போலநிக்கலஸ் கூல்ட் தமது சொந்தக் குதிரைவண்டியில் வந்துசேர்ந்தார். நீதவான் நடுத்தெருவில் திக்கற்றவராய் நிற்பதைக் கண்டு, ஓடிவந்து வணங்கி, தம்மை இன்னாரென்று அறிமுகம்செய்வித்து, நீதவானை தமது வண்டியிலேயே யாழ்ப்பாணம்கொண்டுபோக அனுமதி கேட்டார். நீதவானுக்கு அளவற்ற மகிழ்ச்சி. வண்டியில் ஏறிக்கொண்டார். கூல்ட் நேரே யாழ்ப்பாணத்துக்குப் போகாமல் பல தெருக்களெல்லாம் சுற்றி வளைந்து கடைசியில் ஒருவாறு நீதவானின் இருப்பிடத்துக்கு போய்ச் சேர்ந்தார். இக்காட்சியைக்கண்டவர்கள் எல்லோரும் 'புதிய நீதவானும் கூல்ட் அப்புக்காத்தரும் நல்ல சிநேகிதம்' என்று பேசிக்கொண்டார்கள். அதன் பின் கூல்ட்டுக்கு ஏராளமான வழக்குகள் வந்து சேர்ந்தன!

## தேரையும் கூனும்

தேரை ஒருவர்மீது விழுந்தால் அவர் கூனிபோவார் என்றும், கர்ப்பிணிகள் மீது விழுந்தால் பிறக்கும் குழந்தை கூனிப்போகும் என்று எண்ணுவது தவறு. தேரையிலிருந்து ஒருவித துர்நாற்றமுள்ள பதார்த்தம் வெளிப்படுகிறது. இதனால் அதை வேறு பிராணிகள் உண்பதில்லை. தேரை விழுந்தால் கூடாது என்று சொல்வது இதற்காகத்தான்.

## கொடைவள்ளல்

இருவர் பஸ்ஸில் பிரயாணம் செய்தார்கள். ஒருவர் திடீரென்று தமது மடியைத் தடவிப் பார்த்துவிட்டு, "அடே பாக்கையல்லவோ மறந்துவிட்டேன். கொஞ்சம் பாக்கு இருந்தால் கொடுப்பீர்களா?' என்று மற்றவரைக் கேட்டார். மற்றவர் நாலைந்து பாக்குச் சீவலைக் கொடுத்தார். முந்தியவர் அதை வாங்கிக்கொண்டு மறுபடியும் தீவிரமாக தமது மடியைத்தடவினார். 'அட சீ! வெற்றிலையையுமல்லவோ மறந்துபோனேன். என்ன கஷ்ட காலம், ஒரு துண்டு வெற்றிலை தருவீர்களா?' என்றார். மற்றவர் அவரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு 'வெற்றிலை இல்லாதபோது பாக்கை எதற்காக நான் கொடுத்த பாக்குச்சீவலைத் தாரும்' என்றார்.

தயாரிப்பு:

—வழிப்போக்கன்'

# நூல்களின் தோற்றம்

மனித நாகரிகத்தின் ஆரம்பகாலத்தில் பேச்சு வழக்கு ஏற்பட்டபொழுது தனித்தனிச் சொற்களாகவே முதல் தோற்றியிருக்க வேண்டும் அச்சொற்களும் ஓரெழுத்து ஈரெழுத்துக்களால் ஆய சொற்களாதல் வேண்டும். சங்ககால நூல்களை உற்று நோக்கும்போது இவ்வுண்மை புலப்படும். பெரும்பாலும் ஓரெழுத்து ஈரெழுத்து மொழிகளும்

## இலக்கிய வழக்கு—2

மூவெழுத்து மொழிகளுமே காண முடியும். பண்டைக்கால இலக்கிய வரம்பு கண்டுணர்ந்த தொல்காப்பியனார் இந்த உண்மையை அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார்.

"ஓரெழுத் தொருமொழி
ஈரெழுத்தொருமொழி
இரண்டிறந்திசைக்கும்
தொடர் மொழி
மூன்றேமொழி நிலை
தோன்றிய நெறியே
உளப்பட"

இதனால் ஓரெழுத்து மொழிகளும் ஈரெழுத்து மொழிகளுமே தனி மொழிகள் என்பதும் ஏனையவை தொடர்மொழி என்பதும் அவர் கருத்து. எனவே மக்கள் பேசத்தொடங்கிய ஆரம்ப பருவத்தில் ஓரெழுத்து ஈரெழுத்துக்களால் ஆகிய சொற் கூட்டங்களே உற்பத்தி ஆயின என்பதும் அவைகளே கருத்துள்ள முதற் சொற்கள் என்பதும் புலனும்' பின்னர் காலப் போக்கில் இடைநிலை சாரியை முதலிய உறுப்புகளைச் சேர்த்தும், சொற்கள் பல சேர்ந்து ஒரு சொல்லாந்தன்மையில் மருவியும் சொற்கள் நீட்டம் பெற்றுத் தொடர் மொழிகள் உற்பத்தி ஆயின என்றே கோடல்வேண்டும். ஆசிரியர் கருத்திலிருந்து சங்க இலக்கியச் சொல்லாட்சியிலிருந்தும் நாம் உணரக் கூடியது இஃதே. இவ்வியல்பே இயற்கையின் வளர்ச்சியுமாகும். தொடக்கத்தில் உருவத்தில் சிறுத்திருப்பதும் பின் வளர்ச்சியினால் உடுவத்தில் பருத்திருப்பதுமே இயற்கை காட்டும் உண்மை அன்றேல் வளர்ச்சி என்று ஒன்று இன்றாகும்.

மக்கள் நாகரிகத்தில் பேச்சு மொழியின் உற்பத்தியை, ஒரு பிள்ளை பிறந்தது முதல் பேச ஆரம்பிக்கும் போது உண்டாகும் நிலைமைகளை உற்று நோக்குவதினால் ஓரளவு ஊகித்தறிய முடியும். முதல் குறை மொழியாகவும் பின்னரும் சிறுச் சிறுமொழிகள், தனிச் சொற்களாகவுமே பேசித் தனது உள்ளக்கிடக்கையைப் புலப்படுத்துவதை அறிவோம்.

இவ்வாறு தனிச்சொற் கூட்டமாகச் சொற்கள் பிறந்த பின்னர் பலசொற்களை இணைத்துப் பேச ஆரம்பித்தபோது சொற்றொடர்கள் வழங்கலாயின. அச்சொற்றொடர்களும் ஆரம்பத்தில் மிகுதியும் தொகை மொழித் தொடர்களாகவே வழங்கிவரல் வேண்டும். உதாரணமாக பாம்புகடி. அவன்கல் எறி. நீ கோயில் போ என்றின்னவாறு. திணைபால் காலங்களை உள்ளுறுத்தி நினைத்துக்கொண்டு வெளியே பொருத்தமான நடிப்புகளையும் இணைத்தே பேசுவாராயினர். பின்னர் இவ்வழக்கு சிறந்த தொகைமொழிகளையும் சுருங்கிய சொற்றொடர்களையும் உற்பத்தி செய்தது.

இவ்வாறே, சொல்லாக்கம் பெற்ற மக்களுள் அறிவுடைச் சான்றோரும் பலர் தோற்றுவாராயினர். அன்னார் ஆட்சியில் மொழிகள் செப்பனிடப்பட்டு சுருங்கிய உருவத்தில் இசையோடு இணைத்துப் பாக்களைப் பாடுவாராயினர். அக்காலத்தில் மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டுவான் வேண்டி அறிஞர்கள் மேற்கண்ட வழிதான் பாக்கள் பாடித் தெருட்டுதலாகும். இவ்வாறு தம் பணியை ஆண்டி முதல் அரசன்வரை எல்லார் மாட்டும் பாக்கள்

வரணியூர் பண்டிதர்
ஆ. சின்னத்தம்பி

மூலம் அறிவு கொளுத்துவாராயினர்; அப்பருவத்தில் பாக்கள் உற்பத்தியாயின.

பாக்கள் உற்பத்தியானபொழுதும் தனிப்பாடல்களாகவே முதல் ஆரம்பித்தன. பாக்களும் அக்கால மக்கள் வாழ்க்கைக்கு அமையவும், அவர்கள் வாழ்க்கைத் தேவைகளுக்கேற்பவும், தாம் எடுத்தாளும் பொருள்கோளுக்கமையவும், மக்களுக்கு உணர்ச்சியூட்டும் வண்ணம் இசையை நான்காகப் பகுத்

(10-ம் பக்கம் பார்க்க)

# வேப்பெண்ணை குடிக்கிறார்!

வீரேசை சாவகச்சேரி சந்திரத்தில் ரேகைகளின் அமைப்பைக் கொண்டு பலன் சொல்பவர்கள் ஒருவர் சித்துக்கள் செய்வதில் வல்லவராயும், வருங்காலத்தை முன்கூட்டியே அறியக் கூடும் திறன் படைத்தவராயுமிருப்பார் என்றும் கூறிவருகின்றனர். ஆனால் எல்லோரும் சித்துக்கள் செய்யவும், வருங்காலத்தை முன் கூட்டியே அறியக்கூடும் திறன்படைத்தவர்களாகவுமிருக்கமுடியாது.

கச்சேரி நல்லூர் வீதியில் இருக்கும் பரமானந்தராசாவுக்கு இந்த ரேகை அமைந்திருக்கிறதோ தெரியாது. அவர் சித்துக்கள் செய்பவராயும், வருங்காலத்தை முன்கூட்டியே அறிபவராயுமிருக்கிறார்.

கச்சேரி- நல்லூர் வீதியில் தெற்கு வாசல் வீடு. கல் வீட்டின் முன்பாக ஓரளவு உயர்ந்து வளர்ந்துள்ள பலா மரம். பலாமரத்தின் கீழே நடராசப் பெருமானுக்கு ஆலயம்.

ஆலயத்தில் நாலுபேர் பூசைசெய்வதில் ஈடுபடுகின்றனர். வளவு நிறைய மக்கள் கூட்டம். வளவில் திற்க இடம் கிடைக்காதோர் வீதியில் குழுமி நிற்கின்றனர். வீட்டின் ஒவ்வொரு அறையும் திறந்துவிடப்பட்டுள்ளது. அந்த அறைகளிலும் ஆண்களும் பெண்களும் நிறைந்து காணப்படுகின்றனர்.

இன்னொரு பெரியஅறை. அதுதான் சுவாமி பரமானந்தராசாவின்பூசை அறை. பூசைஅறையில்சுவாமிபடங்களைச் சுற்றித் தீபாலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

குழுமிநிற்கும் பக்தர்கள் கைகளில் செவ்விளநீர்க்குரும்பைகளைத் தாங்கி நிற்கின்றனர். அத்தனையையும் அங்குமிங்குமாக ஓடிஓடி வாங்கி தன் தலையில்அடித்து உடைக்கிறார் பரமானந்தராசா. இத்தனை ஆயிரக்கணக்கான செவ்விளநீர்க்குரும்பைகளை அவர் எப்படித்தான் தன் தலையில் அடித்துடைக்கிறாரோ என்று நான் எண்ணிப் பிரமித்துப்போய் நிற்கையில்தான் போத்தல்

## வி. இன்னுசிமுத்து

கணக்காக அவர்வேப்பெண்ணெயையும் குடித்துத்தீர்த்தாரே

அதன்பின் அடியார்களை அணுகி அவர் தம் குறைநீக்கும் தோரணையில் அவர்கள் என்ன கவலையில் பீடிக்கப்பட்டுள்ளார்கள், என்னவிதமான நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் கூறிப்பரிகாரம் சொல்கிறார்.

ஆயிரக்கணக்கில் மக்கள் கூடிநின்றஇடத்தில் பஜனைச் சபையினர் முருகனை வாழ்த்திப்போற்றும் பாடல்களை இசைக்க, 'இந்தஇடத்திலே அங்கத்தில் குறையேற்பட்டுள்ள குழந்தையை ஒருவர் வைத்துக்கொண்டிருக்கிறார், அந்தக்குழந்தையை என்னிடம் கொண்டு வாருங்கள்' என்று பரமானந்தராசா கூறியபோது வீதியில் நின்ற ஒருவர் குழந்தையுடன் அவர் முன் வந்துநின்றார்.

குழந்தைக்கு விபூதிபூசி செவ்விளநீர் குடிக்கக் கொடுத்த பின் பாசு 'கொண்டு செல்லுங்கள் குறைதீரும்'' என்கிறார்.

குழந்தையின் தகப்பனாரை நான் அணுகி "நீங்கள் வந்தது ஏற்கனவே அவருக்குத் தெரியுமா?'' என்று வினவினேன்.

''இல்லை, அவர் அழைப்பதற்குச் சற்று முன்னதாகத்தான் நான் வந்தேன். வளவுக்குள் சனக்கூட்டமாய் இருந்தபடியால் வீதியிலேயே நின்றுவிட்டேன். எப்படியோ தெரிந்து கொண்டு அவர் என்னை அழைத்துவிட்டார்'' என்றார். அவர் மட்டுவிலிலிருந்து வந்தவராம்.

'எனக்குப் பெரிய கஷ்டகாலமாயிருக்கு. செய்வினை சூனியம் ஏதும் வீட்டிலை இருக்கோ?' இப்படி ஒரு கிராமவாசி அவரை அணுகி கம்மிய குரலில் கேட்கிறார்.

'மனப்பயம்' என்றுபதிலளித்த பரமானந்தராசா, 'பயப்படாமல் போ, போய் முருகனை நிதமும் நினை' என்கிறார்.

இறைவனுக்கு ஆகாதது எதுவும் இல்லையென்று அவர் பக்தர்களுக்குத் தைரியம் சொல்லி அனுப்பிவைக்கிறார்.

இருபத்தாறு அல்லது இருபத்தேழு வயது மதிக்கத்தக்க அவர் இந்நிலையை எப்படி அடைந்தாரோ!

...ம் மேலும் கீழேதள்ளி
...ம தவிர மேலுக்கு
...பிரச்சினைகளுக்குத்தீர்வு
... எப்பவுமே எங்களை
...து'' என்றர். அந்தச்சந்
...பங்களிலெல்லாம்அவர்
...அவனை வேறு திசையில்
...துவிட்டிருக்கிறார்.
...றாலும், பழைய நினைவு
...கு அடிமைப்படாமலி
...ற வித்தை. அவனுக்கு
...லும் கைவரவில்லை.
...ந்த அம்பலவாணர்
...டு வாழ்க்கை அதை
...ட நினைவுகள் கழுகு
...ல அவனுள்ளே வட்ட
...டுக்கொண்டேயிருந்
...
...தசாமி அவனை விட்டுப்
...துவிட்டபோது, 'நான்
...இங்கிருக்கிறேன்' என்ற
... அவனுக்ளே பிறந்து
...ன ஆட்டிவைக்கிறது.
...ற்கு முடிவு?
...ந்த நினைவுகளை மனத்
...யிருந்து பிடித்து வெளி
... நிவிடவேண்டும். இதை
...க்காவது சொல்லியாக
...டும். ஆனால் யாருக்
...சொல்றது?'
...வருக்குமே சொல்ல
...ண்டிய அவசியமில்லை.
...தெல்லாம் எங்காவது
...னைச்சிட்டா. என்
...திலேயிருக்கிறநினைப்பு
... எல்லாமே வெளியே
...ன மாதிரித்தானே!'
...ந்த எண்ணத்தில் அவன்
...ச்சாலையிலிருந்த மிகு

திக்காலத்தில் அம்பலவாணர் வீட்டுவாழ்க்கைநினைவுகளை ஒரு கொப்பியில்எழுதி வைத்திருந்தான் அது கோவிந்தன் வீட்டிலே, பாய்ச்சுருளின்மேல் இடக்கிறது. இந்த வயல் வெளிகளின் சூழ்நிலை "அதை எழுதி முடித்து மூன்றுநாலு மாதத்துக்கு மேல். எழுதியதை ஒரு தடவை வாசித்துப் பார்ப்போமா? என்ற ஆவலை அவனுள் தூண்டுகிறது.

கோவிந்தனின் வீடுகிட்டிவிட்டது. முற்றத்தில் நின்று சுற்றுமுற்றும் பார்த்தவன், தூரத்தில் சோமு வருவதைக் கண்டுவிட்டு அவனை நோக்கி வருகிறான்.

''உச்சி மத்தியானம்வரை எங்கேடா போயிருந்தே?''

சோமுவின் சிரிப்பை அவன்சட்டைசெய்யவில்லை. திரும்பி வீட்டை நோக்கி வந்துகொண்டே, 'முதலிலை சாப்பிடு. வீட்டையும்பார்த்துக்கொள். நான் ஆசுபத்திரிக்குச் சாப்பாடு கொண்டு போகவேணும்' என்றவன், குடிசையினுள் நுழைந்து சோமுவை அமர்த்திச் சாப்பிடச் செய்தான். அவன் சாப்பிட ஆரம்பித்ததுமே சாப்பாட்டுப் "பார்சல்" ஒன்றை எடுத்துக்கொண்டு ''நான் போகணும். இன்னும் போட்டுச் சாப்பிடு— மிச்சம் வைக்காதே'' என்று வெளியே நடந்தான்

(வளரும்)

## மாணவர்களுக்கு 'டியூஷன்' அவசியமா?

# கல்வி முறையில் மாற்றம் வேண்டும்!

— செல்வன் வி. சோதிநாதன்

இன்றைய மாணவர் சமுதாயத்தில் காட்டுத் தீபோல் பரவிவருவது "டியூஷன்" என்ற பிரத்தியேக கல்வியாகும். கல்லூரி மாணவ மாணவிகளின் அநேகர் டியூஷன் இன்றி வகுப்பு சித்திசெய்வது இயலாத காரியமாகி விடுகிறது. மாணவர் மத்தியில் இவ்விதமான ஒரு கஷ்டத்தை ஏற்படுத்திக்கொண்டிருப்பது கல்லூரி ஆசிரியர்களா? மாணவர்களா? அன்றி மாணவர்களின் பெற்றோர்களா? என்று அலசிஆராய்ந்து பார்த்தபோது எமது சிந்தனையில் தோன்றியபலப்பல கருத்துக்களில் ஒரு சில முக்கியகருத்துக்களை இரத்தினச் சுருக்கமாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

### கல்விமுறையில் மாற்றம் ஏற்பட்டிருத்தல்

சென்ற பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த கல்வி முறையிலும் தற்போதுள்ள கல்விமுறை பெரிதும் மாறுபட்டுள்ளது. தற்போது நடக்கின்ற கல்விப்பொதுத் தராதர பத்திரப் பரீட்சை சாதாரண தரத்திற்குரிய பாடத்திட்டத்தையும் எட்டாம் வகுப்பு வரையிலுள்ள பாடத்திட்டத்தையும் ஒப்பிட்டு பார்க்குமிடத்து படிப்படியாகப் பாடத்திட்டம் அமையவில்லை. ஏனெனில் எட்டாம்வகுப்புவரையுள்ள மாணவர்களுக்கு அவர்களுடைய தரத்திற்கும் வயதிற்கும் ஏற்ற கல்வி போதிக்கப் படுவதில்லை. தரத்திற்கும் வயதிற்கும் குறைவான பாடத்திட்டம் அமைக்கப்பட்டு கல்விபோதிக்கப்பட்டு வருகிறது. இக்குறைபாடு எட்டாம் வகுப்பிற்குமேல் செல்லும்போதுதான் மாணவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. எனவேமாணவர்கள் எட்டாம் வகுப்புக்குமேல் பிரத்தியேக கல்வியாகிய டியூஷனை நாடுகிறார்கள்.

### மாணவர்களின் ஊக்கக்குறைவு

எத்தனையோ ஆசிரியர்கள் இரவுபகலாகமாணவர்களுக்கென சுருக்கமான வினாவிடைகளை தயாரித்து போதித்தபோதிலும், மாணவர்களின் ஊக்கக்குறைவினாலும், தங்கள் வீட்டுப்பாடங்களை ஒழுங்காக செய்யத் தவறுதலாலும். ஆசிரியர்களின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் மிகக்குறைப்பதோடு தாங்களேதங்களுக்கு கொஞ்சநஷ்டத்தையும்தேடிக் கொள்ளுகிறார்கள். நாளடைவில்டியூஷன்என்றபோர்வையில் பணத்தையும் நேரத்தையும் விரயமாக்குகிறார்கள்.

### சில குறிப்பிட்ட பாடங்கள் விளங்காமை

மாணவர்களில் கணிதம், பௌதீகம், ரசாயனம் போன்ற பாடங்கள் இலகுவில் புரிந்து கொள்வதில்லை இவ்விதமான பாடங்களை எவ்வளவு தான் திறமைமிக்க ஆசிரியர்கள் படிப்பித்தாலும் கொடுக்கப்பட்ட நேரத்தில் அந்நேரத்திற்குரிய பாடத்தின் பகுதியை விளங்கிக் கொள்ள முடியாது மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதனாலும் 'டியூஷனை' நாடவேண்டியுள்ளது.

### மாணவர் அதிகரிப்பும் ஆசிரியர் பற்றாக்குறையும்

தற்போது மாணவர்கள் அதிகரித்ததனாலும்ஆசிரியர்கள் பற்றாக்குறையினாலும் டியூஷன் அவசியமாகிறது. ஆங்கிலம்மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கற்பிப்பதற்கு பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் பற்றாக் குறையில் ஒரு வகுப்பில் நாற்பதுக்கும் அதிகமான மாணவர்களை வைத்து கற்பிக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் வருடத்தில் சொற்பநாட்களே பாடசாலை நாட்களாகஇருப்பதால் 'டியூசன்' அவசியமாகிறது.

மேற்கூறப்படும் குறைபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமானால் புதியதோர் கல்வித்திட்டம் அமையவேண்டும்.

### ஐந்தொழில் உணர்த்துப்பாடல்

'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் தேவாரப்பாடலை யாவரும் அறிவர். அப்பாடலில் அரிய பல பொருள் நயக் குறிப்புக்கள் அமைந்து திகழ்கின்றன. சிவபிரான் செய்கருளும் ஐந்தொழில்களைப் பற்றியகுறிப்பு அதன்கண் அமைந்துள்ளது. 'விடைஏறி' என்பது ஆக்கல். 'தூ வெண் மதிசூடி' என்பது காத்தல். 'காடுடைய சுடலைப் பொடிபூசி' என்பது அழித்தல். 'என் உள்ளம் கவர்கள்வன்' என்பது மறைத்தல். 'ஏடுடைய மலரான் உனைநாள் பணிந்து அருள் செய்த' என்பது அருளால் ஆகிய தொழில்களை உணர்த்தின.

### கடவுள் எங்குமுள்ளவர்

ஒருமுறை ஒரு சாமியார் களைப்பு மிகுதியால் கடவுள்சந்நிதானத்திற்கு நேராகக் காலைநீட்டிக்கொண்டு தூங்கிவிட்டார். அது கண்டு மதவாதிகள் திடுக்குற்றனர்; அவரை எழுப்பிக் கண்டித்தனர். கடவுள் எங்கேஇல்லையோ அந்தப் பக்கமாக என் காலைத் திருப்பி விடுங்கள் என்று அவர் தெரிவித்தார். கண்டித்தவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர்.

## "டியூஷன்" பிரச்னைக்கு எனது கருத்துக்கள்

அன்புசார்ந்த விமலா அக்கா,

சென்ற வார மாணவர் மலரில் மாணவர்களுக்கு 'டியூஷன் அவசியமா?' என்பதுபற்றிய எங்கள் கருத்தைத் தரும்படி கேட்டிருந்தீர்கள். இந்தப் பிரச்னையை யார் ஏற்படுத்தினார்கள், யார் இதற்குக் காரணம் என நான் சிந்தித்தபோது காரணம் பெற்றோர்களும் மாணவர்களும்தான்என்பது விளங்குகிறது.

ஓர் ஆசிரியர் தனது வகுப்பில் உள்ள மாணவர்களுக்குப் பாடத்தைக் கற்பித்துக்கொண்டு இருக்கும் பொழுது மாணவர்கள் அதைக் கவனித்துக்கொண்டு இருக்காமல் தம்மது வேறு பிரச்னைகளில் ஈடுபட்டுவிடுகின்றார்கள். இதனால் மாணவர்கள் ஆசிரியர்கள் கற்பித்த பாடங்களைப்பற்றி புரிந்துகொள்ள முடியாத நிலையுண்டாகின்றது. இந்த இக்கட்டான நிலையில் மாணவர்கள் ஒன்றும்செய்ய முடியாமல் பரீட்சை நெருங்கியவுடன் டியூஷனே கதியென நினைந்து டியூஷனை நாடுகின்றார்கள். புரியாதனவற்றை டியூஷன் மாஸ்ரரிடம் கேட்கலாம்தானே' என்ற அலட்சியத்தினாலும் பாடநேரத்தில் பாடங்களைக் கவனிப்பதில்லை.

வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கும் மாணவர்கள் தங்களுக்குப் புரிந்து கொள்ளாததை அவ்வாசிரியரிடம் திருப்பித் தங்களுக்குப் புரிந்துகொள்ளத் தக்கமுறையில் விளக்கப்படுத்துமாறு கேட்பதால் ஒரு தனிப்பட்ட மாணவனுக்கு மட்டுமல்லாமல் வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களுக்குமே தெளிவாகப் புரியும் நிலைமையுண்டாகின்றது. இப்படியான நிலைமையை வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் மேற்கொண்டால் டியூஷன் எடுக்கும் பிரச்னையே இல்லாமற்போய் விடும்:




தற்போதைய மாணவர்கள் டியூஷன் என்று கூறிவிட்டு சினிமா பார்ப்பதிலும், நண்பர்களின் வேடிக்கைப் பேச்சிலும் தங்களது நேரத்தைக் கழித்துக்கொள்கின்றார்கள். பிள்ளைகள் டியூஷனுக்குச் சென்றுவிட்டார்கள் என்ற எண்ணி ஏமாற்றமடையும் அப்பாவிப் பெற்றோர்களை இன்று

(11-ம் பக்கம் பார்க்க)

# பசியைப் போக்கும் புத்தகம்!

ரெயில்வே கடிகாரத்தைப் பார்த்தேன்; மணி 11-30. தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் மதுரை ரெயில் நிலையத்தை விட்டுப்போய் விட்டது. காலை முதல் சுறுசுறுப்பாக இருந்த பிளாட்பாரமும் ஒய்வெடுப்பதாகத் தெரிந்தது. அங்குமிங்குமாகச் சில பிரயாணிகள். நீல நிற உடைகளோடு சில போர்ட்டர்கள் மட்டுமே இருந்தார்கள். இவர்களுக்கு இனி மாலையில்தான் வேலை.

'வாங்கடா, காந்தி கடைக்குப் போகலாம்' கூட்டத்தில் ஒரு போர்ட்டர் கூறினார்.

'காந்தி கடையா?' விழியைச் சுருக்கிப் புருவத்தை உயர்த்திக் கேட்டார் ஒருவர்.

'ஆமாண்டா; காந்தி பிறந்த நாளன்று திறந்தாங்கல்லே சர்வோதயப் புத்தக நிலையமொன்று அதைச் சொல்லுகிறான்' என்றார் இடையில் ஒருவர்.

இதைத் தொடர்ந்து காந்திஜியின் சர்வோதய சம்பந்தமாய் நல்லதும் கெட்டதுமான விவாதம் தொடங்கிச் சூடாகிக்கொண்டே வந்தது. அந்தக் கும்பலிலிருந்து காதைப்பொத்திக்கொண்டு ஒரு போர்ட்டர் புத்தக நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அந்த பேச்சரவத்திலும் கூடத் தெளிவாக ஒரு குரல் கேட்டது; 'காந்தி புத்தகங்களைப் பிளாட்பாரத்துக்கும் கொண்டுவருகிற நிலை ஏற்பட்டுவிட்டதே!' என்பது தான் அந்தக் குரல்.

ஸ்டோருக்கு வந்தபோர்ட்டர், மத்தியில் மாட்டியிருக்கும் காந்திஜியின் படத்தைப் பார்த்தார். அதில் காந்திஜி சிரித்துக்கொண்டிருந்தார். அடுக்கியிருக்கும் எல்லாப் புத்தகங்களையும் கூர்ந்து பார்த்தவந்தார். காந்திஜியின் 'நான் போற்றும் ஏசுபெருமான்', 'கீதையின் சாரம்' ஆகிய இரண்டு புத்தகங்களையும் எடுத்துக் கொண்டார். சட்டைப் பையிலிருந்து அத்தனை சில்லறையையும் அள்ளி வெளியே போட்டார். ஏறக்குறையப் புத்தக விலைக்குச் சரியாக இருந்தது. புத்தகத்தை எடுத்துக்கொண்டு கடைக்குப் பக்கத்திலேயே துண்டால் தூசியைத் தட்டிப் பிளாட்பாரத்தில் உட்கார்ந்தவர் ஒரு புத்தகத்தில் மூழ்கியேவிட்டார்.

"அண்ணே, சாப்பிடப் போகவில்லையா?" இப்படி ஒரு போர்ட்டரின் குரல் கேட்டு எட்டிப்பார்த்தேன். புத்தகத்தில் ஆழ்ந்திருந்த போர்ட்டர் இன்னும் மீளவில்லை என்று தெரிந்தது. இப்போது புத்தகத்திலிருந்து கவனத்தைத் திருப்பித் தமக்கு மேலே இருக்கும் ரெயில்வே கடிகாரத்தைப் பார்த்தார் மணி 3-30 "என்ன புகைவண்டி புறப்படப்போகிறதா?" என்றார். சட்டைப் பையைத் தடவிப் பார்த்துவிட்டு, 'இன்று உபவாசம்' என்று கூறிச் சிரித்தார். புத்தகத்தையும் அவரையும் மாறிமாறிப் பார்த்துவிட்டுத் தலையில் அடித்துக்கொண்டே போர்ட்டரின் தோழர் சொல்லிவிட்டார்.

'இந்தக் காசுக்கு இப்போ சாப்பிடலாம் ஸார்; ஆனால் மீண்டும் மாலையிலும் பசிக்குமே! இதே காசுக்கு வாங்கிய இந்தப் புத்தகம் இருக்கே, எத்தகைய பசியையும் போக்கிக்கொண்டிருக்கிறது, தெரியுங்களா ஸார்?'

"இந்தாருங்கள். உங்கள் பணத்தை வைத்துக்கொள்ளுங்கள். புத்தகத்தைப் படித்துவிட்டு என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்' என்றேன்.

அந்தப் போர்ட்டர் ஓர் அடி பின்வாங்கி மிகவும் மெதுவாக "இந்தக் காசுக்கு இப்போ சாப்பிடலாம் ஸார்; ஆனால் மீண்டும் மாலையிலும் பசிக்குமே! இதே காசுக்கு வாங்கிய இந்தப் புத்தகம் இருக்கே, எத்தகைய பசியைப் போக்கிக் கொண்டிருக்கிறது தெரியுங்களா ஸார்?' என்றார்.

— சர்வோதயம்

## தெரிந்து கொள்ளுங்கள்!

கண்கள் கமராவைப் போன்ற அமைப்புடையன. கமராவில் லென்ஸ் இருப்பதுபோல கண்களிலும் மணி இருக்கின்றது. கமராவில் காட்சியின் தோற்றம் தலைகீழாக விழுவதுபோல் கண்களின் அடிப்பகுதியிலும் (விழித்திரை) நாம் பார்க்கும்காட்சிகள் தலைகீழாகவே விழுகின்றன. அப்படியானால் காட்சிகளை நேராகப் பார்க்கின்றோமே என்று நீங்கள் கேட்கலாம். இதற்கு மறுமொழி என்னவெனில் விழித்திரையில் தலைகீழாக விழும் காட்சியை விழித்திரைக்கும் பின்னால் உள்ள "ஒப்டிக்நேவ்" என்னும் நரம்பு மூளைக்கு அதை அறிவிக்கும் பொழுது மூளை அதை நேரான காட்சியாகவே எடுத்துக் கொள்கின்றது. ஆகவே நாம் காட்சிகளை நேராகக் காண்கின்றோம்.

ரான்சிஸ்றர் றேடியோவில் இருக்கும் 'ரான்சிஸ்றர்' என்னும் சக்திவாய்ந்த பொருள் 'ஜேமேனியம்' என்னும் உலோகத்தால் செய்யப்படுகின்றது. ஒரு ரான்சிஸ்றரின் அளவு ஒரு 'பென்சில் கூர்' அளவேயாகும்

மீன்களின் அடிப்பகுதி வெண்மையாகவும் மேற்பகுதி கருமையாகவும் இருப்பது அது எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கே. மீனின் எதிரியான வேறு ஓர் உயிரினம் மீனைத் தண்ணீரில் அதன் கீழ்ப்பகுதியிலிருந்து பார்க்கும் பொழுது மீனின் வெண்மையான கீழ்ப்பகுதி ஆகாயத்திலுள்ள வெண்முகில்களோடு சேர்ந்து காட்சியளிக்கும் பொழுது எதிரி மீனைக் கண்டுகொள்வது கஷ்டமாகும். அதேபோல் எதிரியானது தண்ணீரின் மேல்மட்டத்திலிருந்து பார்க்கும் பொழுது மீனின் கருமையான மேற்பகுதியும் தண்ணீரின் கருமையான அடிப்பகுதியும் சேர்ந்து தெரிவதால் மீனை எதிரி இலேசில் கண்டுபிடிக்க முடியாது

மீன், பாம்பு, ஓணான் முதலியவற்றின் உடம்பில் செதில்கள் இருப்பது சூரியஒளியால் வரும் சூடு உடம்பைத்தாக்காது அவற்றை பிரதிபலிப்பதற்கேயாகும்.

— நஞ்சன்

# விதி செய்த சதி

துக்கத்தை நிவிர்த்தி செய்ய சேவையைவிடச் சிறந்த சாதனம் உலகில் இல்லை. கணவனை இழந்து தனிமையில் வாடிய இந்திரா இதை உணர்ந்தார். தனக்கு இனி ஒரே பற்றுக்கோடு தந்தை நேருஜி அவர் காட்டிய வழியே தன் வழி. அவரைப் பின்பற்றி அவரது லட்சியம் நிறைவேற தொடர்ந்து ஒத்துழைப்பதேதான் தன் நாட்டுக்கும் தந்தைக்கும் செய்யும் பெரும்பணி என முடிவு செய்து நாட்டுப்பணியில் இறங்கினார்.

## மீண்டும் இனக்கலவரம்

இந்திரா காங்கிரஸின் மத்திய குழுவில் இடம் பெற்றதோடு காங்கிரஸ் ஆட்சிமன்ற சபையிலும் அங்கத்தவரானார். இவ்விரு குழுவிலும் அங்கத்துவம்

வேதனையளித்தன. இந்த வேதனையை அதிகரிக்கக் கூடிய மற்றொரு சம்பவமும் நடைபெற்றது அதுதான் சீனத் துருப்புகள் பாரதஎல்லையைக் கடந்ததமையாகும். இவர்களைப் பாரதப் படை முறியடித்துவிடும் என்று தெரிந்திருந்தும்நேரு பெரும் கவலைக்குள்ளானார். நண்பர்கள்போல் நடித்து நயவஞ்சகம் செய்கிறார்களே என உளம் புழுங்கினார். மலையெனத் துன்பம் வரினும் கலங்காத அவர் மனதை சீனரின் செயல் கலக்கிவிட்டது. இதனால் நேரு மனவலிமையும் உடல் வலிமையும் இழந்

கவனித்தல். இந்திரா இராப் பகலாகக் கண்விழித்துத் தந்தையின் அருகிலேயேயிருந்து அவரைக்கவனித்தார். இதே நேரத்தில் காங்கிரஸ் அலுவல்களையும் கவனித்து நாட்டின் நிலைபற்றி அறிய ஆவலுறும் தந்தைக்கு அவ்வவ்

விட்டு எழுந்துவிடுவார். இந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவரைச்சமாளித்துச் சமாதானநிலைக்கு கொண்டுவர இந்திரா படும்பாடு பெரும்பாடுதான் இந்திரா முதலில் நயமாகக்கூறுவார் அவர் மிஞ்சினால் கண்டிப்



முக்கியமான விஷயத்தில் முரண்டு பிடிக்கும் அப்பாவை வழிக்குக் கொண்டுவரப் பாடுபடுகிறார் அன்புமகள்.

## இந்திரா வாழ்வில் — 13

வசித்துத் தன்னை மறந்து இந்திரா செயலாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் 1962-ம் ஆண்டு நாட்டில் திரும்பவும் வகுப்புக் கலவரம் தலைதூக்கியது. சிறுபான்மையினரான முஸ்லிம்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் இவர்களைப் பாதுகாக்கவும் ஜலக்பூரில் வெறியர்களின் வன்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இந்திரா விரைந்தார். அங்கு சென்று ஏழை முஸ்லிம்களை ஆபத்திலிருந்து காப்பாற்றினார். கலவரக்காரர்களிடம் நயமாகக்கூறி அவர்களை அடக்கினார்.

## நேருஜியின் கவலை

இச்சம்பவங்கள் பற்றித் திரும்பிவந்து தந்தையிடம் கூறினார். மதச்சார்பற்ற குடியரசாகப் பாரதம் விளங்கவேண்டும் என்க் கனவு கண்டுகொண்டிருந்த நேருஜிக்கு இச்சம்பவங்கள்

தார். இதுகண்ட இந்திரா துடித்தார்.

ஒருவாறு இரு நாடுகளுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆக்கிரமிப்பும் ஓய்ந்தது. எனினும் நேருஜியின் மனம் கவலையில் இருந்துவிடுபடவில்லை.

## மகாநாட்டில் நேருஜி மயக்கமடைந்தார்

1964-ம் ஆண்டு புவனேசுவர் காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இம்மகாநாட்டில் நேருஜி திடீரென மயக்கமுற்றார். இந்த மயக்கம் அவரை ஒரு மாதகாலம் வரை படுக்கையில் வீழ்த்தி விட்டது. இந்திராவுக்கு இப்பொழுது இரு பொறுப்புகள் தலையில் சுமத்தப் பட்டுவிட்டன. ஒன்று தந்தையைக் கவனித்தல் மற்றது நாட்டு விவகாரங்களைக்

வேளையில் நடைபெறும் சம்பவங்களை விளக்கிக்கூறினார்.

## முரண்டுபிடிக்கும் தந்தை

நேருஜி குழந்தையின்சுபாவம் உடையவர். சிலவேளைகளில் இந்திரா கூறுவதை எதிர்ப்பார் அதை ஒத்துக்கொள்ளாது முரண்டுபிடிப்பார். தானே நேரில்சென்று எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும் எனப் பிடிவாதம் கொண்டு உடல்நிலையையும் கவனியாது படுக்கையை

பாகக் கூறி அவரைச் சம்மதிக்கச்செய்துவிடுவார்

படிப்படியாக நேருஜியின் உடல்நிலை தேறியது. தனது அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்தார். இந்திரா உடனிருந்து 'பைல்'களையும் தபால்களையும் அவருக்கு எடுத்துக்கொடுத்தார். சில மணி நேரத்திலேயே அந்த அலுவல்களெல்லாம் மிக விரைவாகச் செய்துமுடித்து விடுவார் நேருஜி சளைக்காமல் நேருஜியின் அலுவல்களைக் கவனிக்க இந்

திராவைத்தவிர வேறு ஒருவராலும்முடியாது.

## தந்தையை இழந்தார்

1964-ம்ஆண்டு மே மாதம் 26-ம் திகதி நேருஜி தனது அலுவல்களை முடித்துக் கொண்டுபடுக்கைக்குச்சென்றார். அதிகாலையில் அவர் படுக்கையைவிட்டு

— கே. ஜி. —

எழுந்திருக்கும்போது மயக்கமுற்று விழுந்தார். இந்த மயக்கம் அவரை ஒரேயடியாக ஆட்கொண்டுவிட்டது. வைத்தியர்கள் பலர் தம்மாலியன்றதையெல்லாம் செய்தனர். அன்புமகள் கதறி அழுதார். இம்முறை தந்தை பிழைக்கமாட்டார் என்பது இந்திராவுக்கு விளங்கிவிட்டது. அவர் நினைத்ததுபோலவே நேருஜி தன் ஒரே புதல்வியையும், தன்னை நம்பியிருந்த பாரத மாதாவையும் தவிக்கவிட்டு விட்டு மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்தார்.

## எதைநினைத்து அழுவார்

மீண்டும் இந்திராவின் வாழ்வில் விதி சதி செய்துவிட்டது. கணவனைப்பறித்த விதி நீண்ட காலம் பொறுத்திருக்கவில்லை. நல்லாசிரியனாயிருந்து வழி நடத்திவந்த தந்தையையும் பறித்துவிட்டது. இந்திரா தன் அன்புக் கணவரை நினைத்து அழுவாரா, தன் ஒரே பற்றுக்கோடாகவிருந்த தந்தையை நினைத்துஅழுவாரா? அல்லது தன்னை தன்னிலையில் வைக்க வேண்டும் என்னும் நோக்கத்தை லட்சியமாகக் கொண்டதொரு நல்லாத்மாவை இழந்து தவிக்கும் பாரத மாதாவை நினைத்து அழுவாரா? இந்திரா எதை நினைத்து அழுவார்?

(வளரும்)

## பெண்கள் கட்சி!

டென்மார்க் நாட்டில் புதியகட்சி ஒன்று தோன்றியிருக்கிறது. 'பேரலல் பெண்கள் கட்சி' என்று அதற்குப் பெயர். பெண்கள் மட்டுமே இந்தக்கட்சியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இந்தக் கட்சியின் இலட்சியம் - பெண்களின் உரிமையைப் பாதுகாக்க, நாட்டுக்கு ஆணும்பெண்ணுமாக இரண்டு பிரதமர்கள் இருக்கவேண்டும்.

# பெண்களின் வாழ்வில் ஒரு திருப்பம் வேண்டும்

அடுப்படி வேலைக்காகவும், சதா பிள்ளைகளைப் பெற்றுச் சுமந்துகொண்டிருப்பதற்காகவுமே பெண்கள் படைக்கப்பட்டார்கள் என்ற மடு பிற்போக்குக் கொள்கை இப்போதும் நமது நாட்டில் இருந்துவருகிறது. இந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்படவேண்டும். மனம் நிறைந்த சுகவாழ்வு வாழவே பெண்கள் பிறந்தார்கள் என்பதை எல்லோருமே உணரவேண்டும்.

எல்லாப் பெண்களும் முடிந்தவரை கல்வி கற்கவேண்டும். உயர்ந்த உத்தியோகங்கள் பார்க்கமட்டுமல்ல, வாழ்க்கையைச் சீராக வகுத்துச் சிறப்பாக வாழ்வதற்கு. பிறருக்கு நல்ல பாடம் போதிக்க

கணேஷ்

'ஈனஜன்மம்', 'பேதை' இந்தச் சொற்களெல்லாம் அழிந்துபோய்விடவேண்டும் அல்லாவிட்டால் அழிக்கப் படவேண்டும்.

"பெண்சிரித்தால் போச்சு" இந்த பழமொழி எமக்கு இனிமேலாவது தேவையற்றதாக இருக்கட்டும். பெண் சிரிப்பதற்குக்கூட உரிமையற்றவளா?

## தைரியம் வேண்டும்

'பெண்களை நம்பாதே பெண்களை நம்பாதே' பாட்டுக்கள் இன்னமும் றேடியோக்களில் கூக்குரலிடுகின்றனவே. இவற்றை நிறுத்த யாருக்கும் இன்னும் தைரியம் வரவில்லையா?

## குற்றவாளிகள் அல்ல

பிள்ளை பெறாதவர்களை மலடி, மலடி என்று ஒதுக்குவது, கணவனை இழந்தவளை விதவை, விதவை என்று ஒதுக்குவது - இந்த காட்டுமிராண்டிவழக்கு இன்னும் ஏன் நமது சமுதாயத்தில்

தொற்றிக் கொண்டிருக்க வேண்டும். இன்று முதலாவது அவர்களைக் குற்றவாளிகளைப்போல் நடத்தாமல் மனித ஜன்மங்களாக நடத்த முன்வருவோமா?

## சரிமாதி உரிமை

நமது சமுதாய சீரமைப்பில் பெண்கள் சரிபாதி அங்கம் வகிக்கவேண்டும். அப்பொழுதுதான் நமது வருங்கால சமுதாயம் சிறப்பாக வாழ முடியும், சீராக வாழ முடியும்.




தயாரிப்பு — குணம்


## மதிப்பு

இளம் பெண்ணைச் சித்திரத்தில் வரையும்பொழுது குறிப்பாக நமது தமிழ் ஓவியர்கள் பக்கத்தில் ஒரு கவலை தோய்ந்த தந்தையையும் வரைந்துவிடுகின்றார்கள். கலை கலாச்சாரம்பற்றியே பேசிக்கொண்டிருக்கும் நாம் பெண்களுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்திருக்கிறோம் பார்த்தீர்களா? நமது சமுதாயத்தில் பெரும்பாலான இளம் பெண்கள் மகிழ்ச்சியாக இப்போது வாழவில்லை என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இந்த நிலை எப்பொழுது மாறுவது?

## லஞ்சம் வளர காரணம்

சீதன வழக்கம் நம் சமூகத்தில் இருப்பதும் லஞ்சம் வளர்வதற்கு ஒரு காரணம்.

## அழுவதற்காகப் பிறக்கவில்லை

அழுவதற்காகப் பெண்கள் பிறக்கவில்லை. வாழ்வில் உள்ள சுகங்களை நல்ல வழியில் அனுபவிக்கவே அவர்கள் பிறக்கின்றார்கள்

## எதற்காகதலை குனிவு

நாணம் நாணம் என்று பெண்களின் முதுகுகளைக் கூனச் செய்துகொண்டிருப்பவர்களே, நீங்கள் சிறிது ஒதுங்கிக்கொள்ளுகின் றீர்களா? நேர்மையாக நடந்து கொள்பவர்கள் எதற்காக தலை குனியவேண்டும்?

## மகிழ்வதற்கே சட்டம் வேண்டும்

பெண்களுக்குச் சட்டதிட்டங்கள் போட்டுக்கொண்டி

(11-ம் பக்கம் பார்க்க)

## பெண்ணைப் பற்றி

**தன்னை ஆளும் அரசியை...**

பணக்காரமனைவியைப் பெறும் ஏழைக் கணவன் மனைவியைப் பெறவில்லை. தன்னை ஆளும் அரசியைப் பெறுகின்றான்.—பேக்கன்

**பெண் எப்படிப் பட்டவள்**

ஒரு கவிஞனுக்கு கற்பனை வினையும் தோட்டம் பெண். ஒரு கவிஞனின் காவியப் படைப்புக்கு உயிர் கொடுப்பவள் பெண். ஒரு ஞானியின் ஞானோதயத்தின் பிறப்பிடம் பெண். ஓயாது உழைக்கும் மனிதனின் களைப்பை ஒருநொடிகளத் தால் தீர்த்து வைப்பவள் பெண். —ரூஸ்வெல்ட்

**உயிரைக் கொள்ளை கொள்ளுவது எது?**

அழகு கண்களைக் கவர்கிறது. பெண்ணின் சிறந்தபண்போ உயிரைக் கொள்ளை கொள்ளுகிறது. —வால்டேர்

**கள்ளமற்ற இதயத்தில்...**

ஒருபெண்ணின் கள்ளமற்ற இதயத்தில் புகுந்து பார்த்தால் அங்கே இரக்கம் தியாகம் கற்பு எனும் மாணிக்கங்களைக் காணலாம். — ஹார்கிரேயிஸ்

பெரியோர்கள்

# நூல்களின் தோற்றம்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தனர். அவை, செப்பலிசை, அகவலிசை, துள்ளலிசை, தூங்கலிசை என்பனவாம்.

செப்பலிசையாவது செப்பிக் கூறுதல். அஃதாவது ஒருவருக்கு ஒருவர் விடை கூறுவான்போன்று அறவழி, நீதி முதலியவற்றைப் புகட்டிக் கூறுதல். இதற்குரிய பா வெண்பா எனப்படும். நாலு வகையான இசைப்பாக்களில் இதனையே முதற்பா என்பர். எனவே, சான்றோர் செய்யுள் செய்யும் பருவத்தில் முதன்முதல் யாக்கப்பட்ட பாவே வெண்பா என்பது பெறப்படும். இதனால் நாம் அறியக்கூடிய உண்மைகள் பலவுள. அப்பருவத்தில் மக்கட்சமுதாயத்தின் முக்கியதேவை அறிவுகொளுத்தி நல்வழிப் படுத்தலேயாகும் என்பது போதரும். ஆதலால் வாழ்க்கையைத் தெருட்டி அறிவு கொளுத்தினர். அதற்கு உபயோகமானது செப்பலிசை என்றும் அதற்கு இசைவுடையபா வெண்பா என்றும் கண்டனர். ஆதலால் அப்பருவத்தில் வெண்பாக்கள் தனித்தனிப் பாடல்களாகவே முதன்முதல் யாக்கப்பட்டிருத்தல் கூடும். பிற்காலத்திலும் இவ்வழியின் வளர்ச்சியாகவே நீதிநூல்கள் பல வெண்பாவில் யாக்கப்பட்டிருத்தல் கண்கூடு. வள்ளுவர் பெருமானும் செப்பிக்கூறும் குறள்வெண்பாக்களை ஆதாரமாகவைத்தே உலகுக்கு அறிவுபுகட்டியுள்ளார்.

இன்னும் வெண்பாவை அந்தணர்பா என்றும் கூறுவர் நால்வகைவருணத்துள் முதலாவது வருணம் அந்தணரே. அந்தணர் என்று அதனை வழங்கியமை, முதற்றோன்றிய முதன்மையான பா என்பதையும், அந்தணர் போன்று அறவழிபுகட்டி அறவழிச் செலுத்தும் தன்மையுடையது வெண்பா என்பதையும் புலப்படுத்துவதாகும்; அன்றியும் வெண்பா -வெள்ளைப்பா. எனவே களங்கமற்ற தூய்மையுடையது என்னும் பொருளும் தருவது காண்க. ஆதலின் அஃது அறவழி புகட்டும் அமைதியுடையது என்பதும் கண்டோம். எவ்வகையானும் ஆராயுமிடத்து முதற்றோன்றி முதன்மையான பா வெண்பாவே என்பதும், அறமும் நீதியும் ஆசாரமுமே அறிவுடைச் சான்றோரால் முதன்முதல் புகட்டப்பட்டன என்பதும், அவ்வகை நூல்களேமுதன்முதல் தோன்றியிருக்க வேண்டும் என்பதும் பெற்றோம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் யாவும் வெண்பாவினுலேயே யாக்கப்பட்டுள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாவன: நாலடியார், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, திருக்குறள், நான்மணிக்கடிகை, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்பனவாகும். கணக்கு என்ற சொல்லுக்கு 'நூல்' என்று பொருளாகும். எனவே வெண்பா யாப்பினுல் சிறுசிறு நூல்களை ஆக்கியிருந்தமைக்கு இவைசான்றாகும். இந்நூல்கள் கடைச்சங்கம் மருவிய நூல்கள், ஆதலின் இந்நூல் வழக்குக்கு முன்னோட்டமாக, முதநூல்களாகக் கடைச்சங்க காலத்துக்கு முற்பட்ட காலங்களிலே நூல்கள் இருந்திருத்தல் வேண்டும். அக்கால நூல்களின்வளர்ச்சியே பதினெண்கணக்கு நூல்களாகும் என்பது நுணுகி ஆராய்வோர்க்குப் புலனாகும்.

வெண்பா யாப்புக்கு இலக்கணம் கண்ட சான்றோர், பதினெண் கீழ்க்கணக்கு ஆசிரியர்களின் பல நூற்றாண்டுகள் முற்பட்டவராவர். இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்புதல் மரபாதலின் அஃது உண்மையே. இன்னும் 'பழமொழி' என்ற நூல் தமிழ்மக்களின் யாப்பின் பழமையை நன்கு அறிவிப்பதாகும். 'பழமொழி' என்பவை பேச்சுவழக்கு இருந்த காலத்தே எழுத்து வழக்குக்கு முன் அறிவுடைச் சான்றோரால் அறிவுரைகளாகப் புகட்டப்பட்டு வழங்கி வந்தனவென்றே கொள்ளல் வேண்டும். அதற்கு 'பழமொழி' என்ற பெயரே சான்றாகும். பிற்காலத்திற் அப்பழமொழிகளை அமைத்து வெண்பா யாப்பினுல் நூல்செய்தனர். இப்பழமொழிகள் யாப்பின் உற்பத்திக்கு எடுத்துக்காட்டாக யாப்பின் தோற்றத்தை எடுத்துக் காட்டுகின்றன. ஒளவையாரால் பாடப்பட்ட ஆத்திசூடியும் பழமொழியின் மரபொற்றி வந்ததென்றே கொள்ளக் கிடக்கின்றது. எழுத்து வழக்கு ஏற்படுவதற்கு முன்னர் இத்தகைய பழமொழி வழக்கே இருந்திருக்கவேண்டும். முன்றுறை அரையனார் என்னும் ஆசிரியர் பழமொழிகளை அமைத்து வெண்பாவால் நூலாக்கம் செய்தபொழுது பழமொழிகளின் பழமையை அந்நூற்சிறப்புப் பாயிரம் நன்கெடுத்தியம்புகின்றது. அது,

'பிண்டியின் நீழற்
பெருமானடிவணங்கிப்
பண்டைப் பழமொழி
நானூறும்-கொண்டினிதா
முன்றுறை மன்னவன்
நான்கடியும் செய்தமைத்தான்
இன்றுறை வெண்பா இவை'

என்பது.

இவ்வாறு நூல்வடிவம் கருக்கொண்டகாலத்து நூல்கள் ஒரு செய்யுளானும் பல செய்யுள்களானும் யாக்கப் படுவனவாயின. இதனைப் பாட்டியல் நூல்களே கூறுகின்றன,

ஒன்றே ஆகியும்
ஒன்று பலவாகியும்
வன் ஒன்முகியும்
பாற்படும் இனமே'

என்று பன்னிரு பாட்டியல் கூறுகின்றது. ஒருநூல் ஒரு பாட்டினுலும், பலபாட்டுக்களினுலும், பலவேறுபாட்டுக்களினுலும் ஆக்கப்படலாம் என்பதாம். எனவே ஆரம்பத்தில் ஒரு செய்யுளான் ஆய நூல்களே உற்பத்தியாதல் கூடும். அதற்குச் சான்றாகச் சங்ககாலத்து இலக்கியங்கள் அமைகின்றன. பத்துப்பாட்டு நூல்கள் ஒவ்வோர் செய்யுளான் இயன்றவையே. இவை முன்னோர் மரபைப்பொற்றிச் சங்க காலத்திறுதியில் உண்டானவையாகும். இன்னும் அகநானூறு, புறநானூற்றுச் செய்யுள்களை நோக்கும் போது, அவையெல்லாம் ஒவ்வோர் செய்யுளும் ஒவ்வொரு புலவரால், ஒவ்வொரு கருத்துப் பற்றிப் பாடப்பட்டவையே. இம்மரபும் பன்னெடுங்காலம் முன்இருந்த நூல்மரபை எடுத்துக் காட்டுவனவாகும்.

இவ்வாறு தனிச் செய்யுள்களால் நூல்வடிவம் கருப்பெற்றுப் பின்னர் சிறுசிறு நூல்வடிவங்கள் தோற்றம் எடுத்தன இவற்றை வடமொழியாளர் பிரபந்தம் என்று கூறுவர். பிரபந்தம் என்பது நூல், சங்ககாலம் முழுமையும் நூல்மரபு இந்நிலையிலேயே இருந்திருக்கின்றது. இன்று மிகப் பழைய பெருநூல்களாக இருக்கும் இலக்கியம் ஐந்து காப்பியங்கள்; அவற்றுள்ளும் பழமையான்முதிர்ந்தவை சிலப்பதிகாரமும் மணிமேகலையுமாகும். இவையிரண்டும் ஒரே காலத்து நூல்கள். இவை கடைச்சங்ககாலத்து இறுதியில் உண்டாயின. எனவே இவ்விரண்டு பெருநூல்களுக்கு முன்னர் வேறு பெருநூல்கள் இருந்தமைக்கு ஆதாரமில்லை. சிறு நூல்கள் பல இருந்துள்ளன; இருக்கின்றன. இலக்கண நூல்களை ஆதாரமாகக் கொண்டு நூல்களின் வளர்ச்சியை அறிய முடிகின்றது. பாட்டியல் நூல்கள் சிறப்பாக அறியத்தருகின்றன.

சிறுநூல்வகைகள் தமிழ்மொழிமரபில் எழுந்தவையே. ஒருசிலர் 'பிரபந்தம்' என்ற சொல்லில் மயங்கி இவையெல்லாம் வடமொழிமரபில் இயன்ற நூல்களென்றும் அவற்றைப்பின்பற்றித் தாமும் நூல்களைச் செய்தனர் தமிழ்மொழியாளர் என்றும் கூறுவர். அவர் கூற்று ஆதாரமற்றது. நூல் அமைப்புக்கு இலக்கணம் கூறுவன பாட்டியல் நூல்கள். எனவே நூலமைப்பின் இலக்கணங்களை எடுத்தியம்பும் நூல்களின் பெயர் 'பாட்டியல்' என்றால் அப்பெயர் ஒன்றுமே அவை தமிழ் மரபொற்றி எழுந்த நூல்கள் என்பதற்குப் போதிய சான்றாகும். ஆனால் வடமொழி மரபினும் சிறு நூலமைப்பு இருந்திருக்கலாம். ஆரம்ப காலத்தோற்றம் அதுவே. எம்மொழியாயினும் வளர்ச்சிக்கிரமம் அஃதே. இதனையறியாது வடமொழி வழக்கிலிருந்து அவர்களைப்பின்பற்றித் தமிழ்மொழியாளர் சிறு நூல்களை ஆக்கம் செய்தனர் என்பது சிறிதும் பொருத்தமில்லாததாகும். ஆனால் வடமொழி தென்னாடு போந்த காலத்தொட்டு சில வடமொழிச்சொற்களும் வடமொழி மரபுகளும் தமிழ்மொழியில் கலந்திருக்கலாம். அந்த இயற்கையே, ஆசிரியர் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே வடமொழி தென்னாடு போந்து விரவத் தொடங்கியமையை அன்னார் குறிப்பிடுகின்றார். வடமொழிச்சொற்கள் தமிழில் எவ்வாறு வழங்கவேண்டும் என்பதனை வரையறுத்துணர்த்துகின்றார்.

ஆதலின் தமிழ்மொழி மரபின்வழி தோற்றிய சிறுநூல்கள் சில, பிற்காலத்தில் வடமொழிமணம் கலந்திருத்தலின்வன்று; தவறும் அன்று. அந்நூல்வகைகளைப் பற்றியும் பொருளமைப்பைப் பற்றியும் பின்னர் ஆராய்வாம்.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காலமேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

## காதலிக்க ஆசையுண்டு!

'அல்வைச் சுந்தரன்'

காளையென இவ்வுலகில்
காதல்கொளும் ஆசையுண்டு

வானமுதத் தமிழ்க்கடலில்
வளருமெழில் முத்தெடுத்துத்
தேனமுதம் மாந்தியுளந்
தினவுதர வான்வெளியில்
ஞானரத மேறியுலா
நாடிவரும் போதினிலே
தேனதரம் காட்டுவளசம்...
தீங்கவிதைக் கன்னியோடு -

காளையெனக் கிவ்வுலகில்
காதல்கொளும் ஆசையுண்டு

நீலநெடும் வான்பரப்பில்
நீந்திவரும் தண்மதியில்
கோலமிடும் கடலலையில்
கொஞ்சிவரும் பூங்காற்றில்
வாழுமெழிற் கோலமதை
வாழ்ந்தினிது நான்களிக்கக்
கோலமிட வந்தணைத்துக்
கொஞ்சுகவிக் கன்னியோடு-

காளையெனக் கிவ்வுலகில்
காதல்கொளும் ஆசையுண்டு

ஐயிரண்டு திங்களெலாம்
அன்பெனுமோர் சுமைதாங்கி
மெய்வருந்திப் பெற்றவளை
மேதினியிற் தெய்வமெனக்
கைதொழுது வாழ்ந்திருக்கக்
காதலினுல் வந்தெனது
மெய்யணைத்துக் கொஞ்சலெலாம்
மாதுகவிக் கன்னியோடு -

காளையெனக் கிவ்வுலகில்
காதல்கொளும் ஆசையுண்டு

வீணைகரந் தாங்கியதாய்
வாணிபதப் புகழுமதை
நானுழைத்துச் சுவைத்தருந்தி
நாடுமரும் குளிர்காயத்
தானுழைத்துத் தமிழ்ச்சுவையாய்த்
தான்மடியிற் தலைசாய்ந்து
தேன்வதையாய்ச் சுவைதருவாள்
தீங்கவிதைக் கன்னியோடு -

காளையெனக் கிவ்வுலகிற்
காதல்கொளும் ஆசையுண்டு

பொய்மையெனும் தனியுறங்கிப்
புன்மைமிகும் வழியிறங்கி
வெங்கொடு மிடற்றணையில்
வெற்றுயரில் வீழ்ந்தொடுங்கி
வையமுறும் அவலமதன்
வேதனையில் நானுழலப்
பையவுமென் அருகணைவாள்
மாலைகவிக் கன்னியோடு -

காளையெனக் கிவ்வுலகிற்
காதல்கொளும் ஆசையுண்டு.

## வாழும் பிள்ளை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவரின் பெற்றோரின் வரலாறும் இடம்பெறும் இவற்றைப் பொறுப்பான ஆலோசக ஆசிரியர்மிக இரகசியமாகக் கையாள்வர்.

### குடும்ப சூழ்நிலை

பெற்றோரின் சச்சரவான சூழ்நிலை பிள்ளைகளைப்பாதிக்குமன்றோ? பெற்றோரின் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை பிள்ளைகளுக்குப் பல வசதிகளை அளிக்குமன்றோ? பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்ட பெற்றோர் கவனிக்கவேண்டிய உளவியற் பண்புகள் பல வுள. புருஷனிடம் மனைவி கடமையுணர்ச்சியுடன் நடந்துகொண்டால் அக்குடும்பம் மேலோங்குவதுடன் பிள்ளைகளுக்கும் அது ஓர் எடுத்துக் காட்டாகுமன்றோ! மனைவியிடம் கோபதாபம் கொண்ட புருஷரால் தம் குடும்பத்துக்கும் பிள்ளைகளுக்கும்-ஏன்- சமூகத்துக்கும் அல்லல் விளையும். 'வாய்காட்டும் மனைவி'யால் புருஷன் மனம் நோவதுடன் பிள்ளைகளும்ஏசுதல்,வைதல் முதலிய தீயபழக்கங்களுக்கு ஆளாவர். ஆகவே குடும்பத்தின் பொறுமை, அன்பு' இன்சொல் நிலவினுல் மற்றும் சகல உத்தம குணங்களும் அக்குடும்பத்தில், கன்றின் பின் கறவைபோல்' தாமே சென்றடையும். பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகளைச் சிரசகளர்த்து நம்மாரம் பரியத்தை வளர்ப்போமாக.

## எவரும் திட்டலாம்

லண்டனில் ஹைபார்க்கிக் மேசையும், கதிரையும் எடுத்துக் கொண்டு யார்வேண்டுமானுலும் அரசாங்கத்தைத் திட்டிப் பேசலாம். பேசுபவருக்கு காவலாக பொலிஸ்காரர்கள் உள்ளனர். இப்பேச்சுச் சுதந்திரம்ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் உண்டு. பூங்காவுக்குவரும் பெருந்தொகையாளோர், தாங்கள் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும்அமைதியாக இருந்து பேச்சைக் கேட்கிறார்கள்.

REGAL - Jaffna
Daily 5-15&7-15 p m.
Holidays 10-30a.m
Dean Martin
in
THE AMBUSHERS

தினசரி பி. ப 2-00 இரவு 9-45
சிவாஜி-ராஜஸ்ரீ-பாலையா
நடித்த
**நானே ராஜா**

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
காலை 10-30 மட்டும்
TO TRAP A SPY
(சண்டைப்படம்)

2-வது வாரம்
தினசரி 2-30, 6-30, 9-45
ஏ. பி. நாகராஜன்- வரலக்ஷ்மி
நடித்த
**ஏழு பிள்ளை நல்லதங்காள்**

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பேபி ராணி
சுந்தரராஜன்—பத்மினி
நடித்த
**குழந்தைக்காக**

ராணி
(யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 இரவு, 6-30, 10-00
சுந்தரராஜன் - நாகேஷ்
சௌகார்ஜானகி - லக்ஷ்மி
நடித்த
**கஸ்தூரி திலகம்**

இந்தியாவில் பல நகரங்களிலும், ஈழத்தின் தலைநகர் கொழும்பிலும் 25 வாரங்களுக்கு மேல் காட்சியளித்துப் பெரும் சாதனையை நிலைநாட்டிய வெற்றிச் சித்திரம்.

லிடோ யாழ்நகர்
தினசரி காலை 10-30, பி ப 2-30, மாலை 6-30, இரவு 10-00



சாதனா
சஞ்சே
பால்ராஜ்ஸாஹ்னி
சப்னம்
நடித்த
**ஏக பூல் தோமாலி**
( ஹிந்தி )
( ஈஸ்ட்மன் கலர் )

வெலிங்டன்
(யாழ் நகர்)
தினசரி மூன்று காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
★ சிவாஜி ★ வாணிஸ்ரீ
★ முத்துராமன் ★ சோ
... த முழுநீள ஹாஸ்யச் சித்திரம்
**நிறைகுடம்**
திரைக்கதை வசனம் சோ

# பெண்கள்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும்பவர்கள், பெண்கள் சுகமாக, சௌகரியமாக, மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வேண்டிய நல்ல புதிய திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்தட்டுமே. அதை எல்லோரும் வரவேற்பார்கள். வாழ்க்கை சுடுகாடாக ஆக்குவதற்குத் தரப்படவில்லை. மகிழ்ச்சி நிறைந்த மலர்த் தோட்டமாக்குவதற்கே தரப்படுகிறது. இதனை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டால் இந்த உலகில் கண்ணீர் சிந்தி அழவேண்டியவர்கள் யாருமே இருக்கமாட்டார்களே. புன்சிரிப்பும் புதுப்பொலிவும் எங்கும் பரவச் சேர்ந்து உழைப்போமா?

+ தமிழ்ப் படங்களிலெல்லாம் பெண்கள் குலுங்கிக் குலுங்கி அழுவதுதான் சிறந்த நடிப்பாக இப்போதும் ஒருமுறை வழக்கத்திலிருந்துவருகிறது. இந்த வேடிக்கையான நடிப்பு இன்னும் எத்தனை நாட்களுக்கோ?

# வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப் பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். சாதன மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3409

## தேவை

பளையிலுள்ள கல்வி நிலையத்தில் தமிழ்மூலம் சிங்களம், ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. விபரங்கட்கு: R. வைத்தியநாதஐயர், பிள்ளையார்கோவிலடி, பளை, காங்கேசன்துறை P.O. 3449

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு தாபனத்திற்கு கடைச்சல் வேலையில் நல்ல அனுபவமுள்ளவர்கள் தேவை, விபரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளலாம். யாழ் மோட்டார் ஸ்ரோஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3313

# விற்பனைக்கு

மருந்துகள், மருந்துச்சரக்குகள்

சித்த, ஆயுர்வேத, ஆங்கில மருந்துகள், மருந்துச் சரக்குகள் சிறந்த முறையில் மலிவாகக் கிடைக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3416

வீடு

யாழ் நகரின் மத்தியில் 4-ம் குறுக்குத் தெருவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட வீடு விற்பனைக்குண்டு. வாங்குபவர்க்கு உடனடியாகக் காலி செய்து கொடுக்கப்படும். இல. 9, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 3453

# சித்தூர் வேகஸிருர்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் வகித்திருக்கிறேன். இப்போது இராமநாதன் இசைக்கல்லூரியின் அதிபராகப் பதவி வகிக்கிறேன்.

மே மாதத்தில் 30 நாட்களும் இசைக்கச்சேரிசெய்து வருகின்ற வித்துவான் மதுரை திரு. சோமசுந்தரம்' சித்தூர் வி. வி. இராமச்சந்திரன் ஆகியோர் உட்பட சுமார் 20-க்கும் மேற்பட்ட சிஷ்யர்கள் எனக்குள்ளார்கள் என்ற அவர் இராமநாதன் இசைக் கல்லூரியில் இசைப்பேராசிரியராகப் பணியாற்றுகின்ற திரு. ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகரையும் தம் மாணவர் என்றும் குறிப்பிட்டார். எப்போது மார்கழி மாதம் வரும், "அதை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றேன் ஊருக்குப் போக" என்று அமைதியான குரலில் தெரிவித்தார்.

இசைக்கடலின் இனிய பேச்சையும் பண்பான உபசரிப்பையும் கண்டு அகமிக மகிழ்ந்த நாம் இசைக்கடலின் சிஷ்யைகள் அளித்த இனியகாப்பியையும் அருந்திவிட்டு 'இசைமன்னர்' திரு. சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளையிடம் இருந்துவிடை பெற்றோம்.

# டியூஷன்

8 -ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் காண்கின்றோம். மாணவர்கள் கெடுவதற்கு டியூஷனும் ஓரளவு உதவி புரிகின்றது.

வகுப்பில் ஒரு கணக்கை வகுப்பு ஆசிரியர் ஒரு புதிய முறையில் விளக்குவார். அதே கணக்கை டியூஷன் மாஸ்டர் வேறொருமுறையில் விளக்குவார். இரண்டு முறையையும் புரிந்துகொள்ளத் தவறும் மாணவர் இரண்டு தோணியில் கால் வைத்த கதியையடைவான் மாணவனுக்கு இரண்டு விளக்கங்களும் புரியாமல் தத்தளிக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இது மாணவனின் அறிவுத்திறமையை எவ்வளவு பாதிக்கின்றது ஒவ்வொரு மாணவனும் புரியாதனவற்றை வகுப்பில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரிடம் கேட்டுப் புரிந்துகொள்ளுதலே சாலச் சிறந்ததாகும்.

மாணவர்கள் டியூஷன் எடுத்தால் பெற்றோர்களின் பணம் வீணாகச் செலவழிகின்றது. அத்துடன் மாணவர்கள் தங்கள் நேரத்தையும் வீணாகக் கழிக்கின்றார்கள். டியூஷன் எடுக்கும் மாபெரும் தவறு மாணவர்களைச் சார்ந்ததேயொழிய கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையல்ல.

கல்லூரிகளில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வீட்டுப் பாடம் கொடுப்பார்கள். அம்மாணவர்கள் வீட்டில் டியூஷன் எடுப்பதினால் அவர்களுக்குப் பாடசாலைகளில் கொடுத்த வேலைகளைக் கவனிக்கும் அக்கறை இல்லாமற்போய்விடுகின்றது. இதனால் அம்மாணவன் ஆசிரியரிடம் தண்டிக்கப்படுகின்றான். இக்காரணத்தினால் மாணவனும் ஆசிரியரிடம் வெறுப்பை வளர்க்க ஆசிரியரும் மாணவனிடையே வெறுப்பை வளர்க்கும் நிலையுண்டாகின்றது. இதனால் மாணவனுக்குக் கல்வியில் வெறுப்பு உண்டாகின்றது. பாடசாலைக்குச் செல்வதைக் குறைத்துக் கொள்கின்றான். இம்மாதிரியே டியூஷன் மாஸ்டரிடமும் தண்டிக்கப்பட்டானேயானால் அவனுக்குக் கல்வியிலே முழுவெறுப்பும் உண்டாகின்றது. இவற்றிற்கெல்லாம் ஓரளவு டியூஷனும் காரணமாக இருக்கின்றது என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மை.

ஆசிரியர்கள் போதிப்பதை உடனுக்குடன் வீடுசென்று திரும்பி ஒருமுறை படித்து அவற்றைப் புரிந்துகொள்ளவேண்டும். இம்முறைகளை மாணவர்களாகிய நாம் மேற்கொண்டுவந்தோமேயானால் எங்களுக்கு டியூஷன் பிரச்சினையே ஏற்படாது. மேற்கூறிய எனது கருத்துக்களை எல்லோரும் ஏற்றுக்கொள்வீர்களென நம்புகிறேன்.

இப்படிக்கு;
அன்பான,
(செல்வி) ராஜி மார்க்கண்டு
வண்ணார்பண்ணை.

இன்று மட்டும்
வெஸ்லி சினிமா
சாவகச்சேரி (?)
பி ப 2-30, 6-30 10-00
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**தெய்வத்தாய்**

MANOHARA- Jaffna
Daily
4-45, 7-00&9-45 p. m.
Holidays 10-30a.m.
Christopher Lee
in
TASTE THE BLOOD OF DRACULA
(Color - Adults only)

ஸ்ரீ கலிங்கன்
இணுவில்
தினசரி பி. ப. 6 30, 10-00
ஜெமினி-சாவித்திரி
நடித்த
**மாமன் மகள்**

# மரண அறிவித்தல்

## க. இரத்தினசிங்கம்

இலங்கை நுண்கலை ஆராய்ச்சியாளர் (C. I. S. I. R.) திரு. கனகரத்தினம் இரத்தினசிங்கம் தமிழ்நாட்டில் 6—8—71 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற விவசாயப் போதனையாளர் திரு. கதிரவேலு கனகரத்தினம் தம்பதிகளின் புதல்வரும், இளைப்பாறிய லொக்இலாகா சுப்பிரிண்டன் திரு. இராசசிங்கம், பாதுகாப்பு வெளிநாட்டமைச்சின் வெளியுறவு இலாகா இயக்குநர் திரு. குணசிங்கம், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன வவுனியா கிளை முகாமையாளர் திரு. கீர்த்திசிங்கம், திருமதி சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கேட் முதலியார் திரு. பி. சின்னத்துரை நிக்கிலஸ் (C. C. S) அவர்களின் பேரனும் திருமதி கிரேசின் அன்புக்கணவரும், சூரியகுமார் (இலங்கை மக்கலைக்கழகம் கொழும்பு) விநோதினி, நரேன்குமார், குஞ்சு ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று தெகிவளை கலுபோவிலுள்ள அனுராமாவத்தை 16-ம் இலக்க அன்னாரது இல்லத்திற்குக் கொண்டுவரப்படும். ஈமக்கிரியைக்கான நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

2689

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். - வாணிஸ்ரீ - நம்பியார்
அசோகன், ஜோதிலட்சுமி, நாகேஷ், மனோரமா
ஓ. ஏ. கே. தேவர், ராமராவ்
நடித்த
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அளிக்கும்
தோமஸ் பிக்சர்ஸ்
**தலைவன்**

# நூறு ஆண்டுகளைக் கண்ட பெரியார்

மனிதகுலத்திற்குஆண்டவனால் அருளப்பட்ட பாக்கியம் ஆயுள் பாக்கியமாகும். இதுவே இந்து சாஸ்திரங்களினதும் ஏனைய சமயங்களினதும் நம்பிக்கையாகும். ஆயுள் பலம் பெற்றிருந்த சிலர் நம்மிடையே வாழ்ந்திருக்கிறார்கள்.

இந்துக்களின் வேத நூல்களில் மனிதனின் ஆயுள் 126 வருடங்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மகாத்மாகாந்தி வாழ எண்ணியிருந்தார். இலங்கையில் சிலர் 100 ஆண்டுகளுக்கும் அதற்கு மேலாகவும் வாழ்ந்திருக்கிறார்கள். தென் மாகாணத்தில் திரு. எதிரிசிங்க அவர்கள் 100 ஆண்டு நிறைவு பெற்றிருக்கிறார்கள். அதிகார் நாகநாதன் 104 ஆண்டுகள் வாழ்ந்தார்.

தற்பொழுது 100 ஆண்டுகள் பூர்த்திபெற்றிருக்கும் பெரியார் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி வடக்கில் வாழும் திருவாளர் சின்னையா தம்பிமுத்து ஆவர் ஆகஸ்ட் 8-ம் திகதியுடன் அவர் 100 ஆண்டு நிறைவுபெய்தியுள்ளார்.

திருநெல்வேலி 'தவுக்கை' தம்பிமுத்துவை கடந்த சந்ததியினருக்கு நன்கு தெரியும். அவர்கள் ஒருவரும் இப்பொழுது இல்லை. 'தவுக்கை' என்னும் சொல் மிகுந்த செல்வம்படைத்தவர்களைக் குறிக்கும் மலேச் சொல். தன் வாழ்நாளில் அதிகமானவற்றை மலேயாவில் திரு. தம்பிமுத்து கழித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த திரு. தம்பிமுத்து அவர்கள் தன் ஆரம்பக் கல்வியைக்கிராமப் பாடசாலையிலும்பின் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியிலும் கற்ருர்.

அதன்பின் வியாபாரத்துறையில் ஈடுபட்டுக் காலஞ்சென்ற திரு. ஆசைப்பிள்ளையைப்போன்று யாழ்ப்பாணத்திற்கும் மாத்தளைக்குமிடையில் நித்திய கோச் வண்டிச் சேவை ஏற்படுத்தி அதை மலைநாட்டு ரயில்வே வண்டித்தொடரோடு இணைத்துக்கொண்டார்.

அந்நாட்களில் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் வண்டித்தொடர் இருக்கவில்லை. அது சந்திர உலகத்திற்கு வண்டித் தொடர் ஏற்படுத்தும் முயற்சி போன்ற ஒன்று என்று பிரசித்தி பெற்ற ஒருவர் அன்று கூறினர்.

குதிரைகள் பூட்டிய இவ்வண்டிச் சேவை மூலம் திரு தம்பிமுத்து அவர்கள்சிறந்த சேவை ஆற்றினர். இதன் மூலம் கொழும்பும் இவ்வூர்களோடு இணைக்கப்பட்டது. இதைவிட பல்வேறு வியாபாரங்களையும் நடத்திவந்தார்.

இவற்றினுக்கும் மேலாக ஏனைய தலைவர்களோடு சேர்ந்து யாழ்ப்பாண இந்துக் கல்லூரியை ஆரம்பித்து வைத்த பணி மிகச் சிறந்ததாகும். இது பிற்காலத்தில் மன நிறைவோடு நினைவு கூரக்கூடியதொன்ருகும்.

அதன்பின் மலேயா நாட்டிற்குச் சென்ற யாழ்ப்பாண மக்களுக்கு வரப்பிரசாதமாக விளங்கிவந்த திரு. தம்பிமுத்து தனது அயரா உழைப்பாலும் சுய முயற்சியாலும் தன்னிறைவு ஆகியவற்றினுலும் உயர்வும் மேன்மையுடைய நிலையை எய்தினர்.

1920-ம் ஆண்டு மலேயாவிலிருந்து திரும்பியவுடன் வியாபாரத்துறையில் ஈடுபட்டதோடு விவசாய அபிவிருத்தி சம்பந்தமான கவர்ச்சித் திட்டம், நெற் பயிர்ச் செய்கை, தோட்டச் செய்கை ஆகியவற்றில் ஈடுபாடுடையவராக விளங்கினர்.

காலஞ்சென்ற சேர். அம்பலவாணர் திரு. கனகசபை திரு. வி. காசிப்பிள்ளை திரு. ஆ. மயில்வாகனம் திரு. தி. சி. சங்கரப்பிள்ளை திரு. ஜேம்ஸ் ஷென்ச்மென் ஆகியவர்களும் இதில் கலந்து கொண்டனர். தலதாயன வரியாலை அலுவல்களில் பங்குபற்றி வெகு ஆண்டுகளுக்கு நல்லூர் கிராமச் சங்கத் தலைவராக விளங்கினர்.

யாழ்ப்பாணத்துக்கு மகாத்மா காந்தி வருகை தந்தபோது அவரால் ஆரம்பித்துவைக்கப்பட்ட கதர் இயக்கத்தில் ஈடுபாடுடையவராக இருந்ததுமன்றி தேசிய சம்பந்தமான நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றினர்.

அன்னாரின் ஒய்வான நிலையிலும் அவருடைய தேகசுகம் இறையருளால் நன்ருக இருக்கிறது. அதுபோல்

## சுவாமிநாதனுக்கு 1971-ம் ஆண்டு மக்ஸஸே பரிசு

புதுடில்லி, ஆகஸ்ட் 7

1971-ம் ஆண்டுக்கான மக்ஸஸே பரிசு டாக்டர் எம். சுவாமிநாதனுக்கு அளிக்கப்பட்டுள்ளது. டாக்டர் சுவாமிநாதன் விவசாயத்துறை விஞ்ஞானியாவர்.

சமூக முன்னேற்றத்திற்காக உழைப்போர்க்கு இப்பரிசு அளிக்கப்படுவதுதெரிந்ததே.


'யோக பலத்திலும் சிறந்த பலமில்லை
ஞான ஒளியினும் சிறந்த நண்பனில்லை
மாயையினும் கொடிய தளை இல்லை
ஆணவத்தினும் கொடிய பகை இல்லை.'
-இரத்த ஸம்ஹிதை.

யோகக்கலை என்னும் அரிய நூலை விளக்கப்படங்களுடன் 3-வது பதிப்பாக வெளியிட்டுள்ளோம். 10 மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

த. பெ. இல: 77.

யாழ்ப்பாணம்.


# தலைமை ஆசிரியையின் திறமைக்குப் பாராட்டு

(நமது நிருபர்)

மன்னார் பாண்டியன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் துணுக்காய் காரியாதிகாரி திரு. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றன.

பாடசாலைக் கொடியை வவுனிக்குள காணி அதிகாரி திரு க. பரமேஸ்வரன்ஏற்றி வைத்தார். பதில் தலைமை ஆசிரியை திருமதி ஞானம் வாகீத்தம்பியின் திறமையையும் பாடசாலைக்கு அவர் புரிந்துவரும் சேவையையும் பலரும் பாராட்டிப் பேசினர்கள். திருமதி வாகீத்தம்பியும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரான அவரது கணவரும் இப்பகுதியில் சேவை செய்யக்கிடைத்தது மகிழ்ச்சிக்குரியவிஷயம் என்று அவர்கள் குறிப்பிட்டனர். வவுனிக்குளம் நிறைவேற்றுப் பொறியியலாளரின் துணைவியார் திருமதி வி குலசிங்கம் பரிசுகளை வழங்கினர்.

விபுலானந்தர், நாவலர் இல்லங்களுக்கிடையே நடந்த போட்டியில் நாவலர் இல்லம் வெற்றியீட்டியது. வீரர்களாக செல்வன் க. திருச்செல்வம், செல்வன் ஆ. ஜெயபாலன், செல்வன் ஆ. கமலநாதன், செல்வன் க. தனயசிங்கமும் வீராங்கனைகளான செல்வி பூ. புஷ்பராணி, செல்வி வே இந்திராவதி, செல்வி இ இன்பராணி, செல்வி மு சகுந்தலகுமாரி ஆகியோரும் பரிசுபெற்றனர். தலைமை ஆசிரியை திருமதி நா வாகீத்தம்பியாவரையும் வரவேற்றுப் பேசினர் பெற்ருேர் ஆசிரியசங்கக் காரியதரிசி திரு. ப. அம்பலவாணர் சிரமதானமூலம் பாடசாலை மைதானம்திருத்தவும் பரிசுகள் வழங்கவும் உதவிய பெற்ருேருக்கும் ஆதரவாளர்களுக்கும்நன்றி கூறினர்.

### தலைமையாசிரியருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

முள்ளியவளை சைவவித்தியாசாலையின் முதலாந்தரத் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. வே. தம்பையா தலைமையாசிரியர் இம்மாதம் 1-ந் திகதி தொடக்கம் பண்ணாகம் வடக்கு காலையடி அ மி. பாடசாலைக்குக் கல்வி பகுதியினரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர் கடந்த 15 வருடங்களாக புத்தவெட்டுவான் அ. த. கலவன் பாடசாலை, பசறை, அ. த. வித்தியாலயம், அப்புத்தளை தமிழ் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தலைமையாசிரியராகக் கடமையாற்றியவர்.

றதே அவருடைய அருமைத் துணைவி திருமதி தங்கம்மாவும் தேகசுகத்துடன் இருக்கிறார். ஏனையோருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சீர்சிறப்புக்கள் அமைந்த மதிப்புக்குரிய வாழ்வு இத்தம்பதிகளினது. இவர்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் பெற்ற பாக்கியமுடையவர்கள் இவர்கள் சந்ததியினர் குடும்ப உறவு லட்சியங்களோடு சீரும் சிறப்புமாக வாழ்கின்றனர்.

எஸ்: சிவசுப்பிரமணியம்.

## கடல் வீரருக்கு வரவேற்பு

லண்டன், ஆகஸ்ட் 7

உலகைச் சுழக்கிலிருந்து மேற்குவரை கடல்மார்க்கமாகச் சுற்றிய பிரிட்டனைச் சேர்ந்த பிளிப் என்பவர் தனது 292 நாள் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு பிரிட்டன் திரும்பியுள்ளார். இவருக்கு பிரிட்டனில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்தவரவேற்பில் கேல்ஸ் இளவரசர், இளவரசிஆன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இனிமேல் மாலுமிகள் துணைகொண்டுகூட இப்படியான பிரயாணத்தை தான் மேற்கொள்ளப்போவதில்லையென திரு. பிளிப் பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

## சமயநெறி காட்டும் ....

[2ம் பக்கத் தொடர்ச்சி]

கிராமப்புலில் கந்தசுவாமி கோவில், கரும்பிமாவடிக் கந்தசுவாமி கோவில், பட்டைபோலச்சி வீரபத்திரர் கோவில், கல்லாணி கந்தசுவாமி கோவில், அறுகம் புலம் பிள்ளையார் கோவில், தட்டான் குளப்பிள்ளையார் கோவில், வேம்பராய் தான்தோன்றிப்பிள்ளையார் கோவில், பூசாரயர்கோவில் ஆகியன விளங்குகின்றன.

சைவமும் தமிழும் வாழ உய்ய செந்நெறி கொண்டு வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்துக்கும் ஈழத்துக்கும் பெருமை தந்தவர். இப்பெருமானின் அடியிற் படர்ந்து சென்ற ஒருவர் மீசாலைக்குப் பெருமை தந்துள்ளார்.

### நாவலர் வழியில் மற்றொரு பெரியார்

அப்பெரியாரே வேதாரணிய வீரசிங்கம் என்பவர். இப்பெரியார் இக்கிராமத்தின் கல்வியில் முக்கிய ஈடுபாடு கொண்டிருந்தார். வேம்பிராயில் ஒருபாடசாலையையும் மீசாலையில் ஒரு பாடசாலையையும்நிறுவினர்.

மீசாலையில் இவர் தமது சொந்தக் காணிக்குள்ளேயே பாடசாலையை அமைத்துள்ளார். இப்பாடசாலையே இன்றைக்கு முன்னேற்றம் பெற்று மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயமாகத் திகழ்கின்றது. வேம்பிராயில் இவர் நிறுவிய பாடசாலை தற்போது இல்லை. 1922-ம் ஆண்டில் இவர் தமது உயிராக நிறுவிய பாடசாலையையும், ஆதனங்களையும் பல நிபந்தனைகளோடு கூடிய தர்மசாதனத்தையும் ஐந்து தர்மகர்த்தாக்களிடம் ஒப்படைத்துள்ளார்.

1822-ம் ஆண்டு தொடக்கம் அரைத்தவம் அடையும்வரை தொண்டாற்றினர்.

1926-ம் ஆண்டிற்குமுன் மீசாலையில் நடாத்தப்பட்ட கிறிஸ்தவப் பாடசாலையை அமைக்க இவர் சமயமேதும் பாராட்டாது தனது காணி ஒன்றை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

1926-ம் ஆண்டின்பின் வீரசிங்கம் வித்தியாசாலையில் கற்றுத்தேறிய மீசாலை மாணவ மாணவிகள் ஆசிரியர்களாகவும், அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் விளங்குகின்றனர்.

பண்டிதர் செ. சிவலிங்கம் அங்கு இப்போது அதிபராகக் கடமையாற்றுகின்ருர்.

நீர்வளம் நிலவளம் ஒருங்கே சிறப்பாய் அமைந்த வேம்பிராயில் இவரால் நன்கொடை செய்யப்பட்ட நிலத்தில் இவரது பூதவுடல் அவரதுவேண்டுகோளின்படி அடக்கஞ் செய்யப்பட்டது.

கிராமத்தில் புத்தூர்ச் சந்தி என்று தடுமாற்றத்துடன் வழங்கப்படும் சந்தி வீரசிங்கம் சந்தியென மாறல்வேண்டும் என்ற கருத்து இப்போதுள்ள பொதுமக்களிடையே எழுந்துள்ளது. இவ்வித்தியாலய முன்னாள் தலைமையாசிரியர் திரு. மு. சின்னத்தம்பியும் வித்தியாலயத்தில் அக்கறையுள்ளவராவர்.

வீரசிங்கம் வித்தியாலயத்தில் கற்றவர்களுள் அண்மையில் காலமான 'சந்தக்கவி' சி. சின்னையா அவர்களும் ஒருவராவர். சாவகச்சேரி முன்னாள் உபஅதிபராக இருந்த திரு. கை. செல்லையாவும் வீரசிங்கம் பெரியாரின் தொண்டை விடாது பரப்பி மீசாலை தெற்கில்விக்கினேஸ்வர வித்தியாசாலையையும் சைவ வித்தியா விருத்திச் சபை சார்பில் அமைத்தார். பின்பு இக்கிராமப்பெரியார்கள் இப்பாடசாலையில் பண்டிதர் சி. கா. தம்பையாவைத் தலைமையாசிரியராக நியமிக்கச் செய்து கல்விப் பணி நடைபெற்றது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


**லான்ட்மாஸ்டர் இரு-சில்லு ட்ராக்டர்கள்**

★

துறைமுகத்தில் மற்றுமொரு இறக்குமதி குறிப்பிட்ட அளவு மட்டுமே இருப்பதால் விரையுங்கள்!

தொடர்பு கொள்ளும் விலாசம்:—

பிரவுண்ஸ் குறூப் இன்டஸ்ரீஸ் லிமிட்
டெம்பிளர்ஸ் வீதிக்கு அப்பால், கல்கிசை.